மூன்று மாதத்திற்கு ஒருமுறை வரும்

# கனவு

இளையோர் தலைமைத்துவம் வளர்த்தெடுப்பதற்கான இதழ் 11

ஏப்ரல் 2018



## எனது படிப்பு

## எனது முடிவு

நன்கொடை

₹20/-

தனிச்சுற்றுக்கு மட்டும்

மூன்று மாதத்திற்கு ஒருமுறை வரும்

# கனவு

இளையோர் தலைமைத்துவம் வளர்த்தெடுப்பதற்கான இதழ்

ஏப்ரல் 2018

11

விஷன்ஸ் குளோபல் எம்பவர்மெண்ட் இந்தியா
சார்பாக வெளியிடுபவர்
**தே. சைலட் மோனி**
27, வெயர்லெஸ் ரோடு,
குறிஞ்சி நகர் மேற்கு, கே.கே. நகர்,
திருச்சி – 620 021, தமிழ்நாடு

விஷன்ஸ் குளோபல் எம்பவர்மெண்ட் இந்தியா
சார்பாக அச்சிடுபவர்
செந்தில் பேப்பர் மார்ட், கடலூர்
வரைகலை
மேரிபா ஸ்கிரீன்ஸ், கடலூர்

தலைமை ஆலோசகர்
**கிரேக் பியூ**

முதன்மை ஆசிரியர்
**தே. சைலட் மோனி**
ஆசிரியர்கள்
**K. சுரேஷ் கன்னா**
**I. சாமுவேல் கிறிஸ்துதாஸ்**
**தங்க பாண்டின்**
**G. வசந்தி M. பிரிண்டா**
**C. ராஜமணி**

சந்தா, விளம்பரம், படைப்புகள் மற்றும்
வாசகர்களின் கேள்விகளுக்கு
**089400 51900**
என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும்

## உள்ளே...

3 The Choice is Yours...
உன் கல்வி உன் பொறுப்பு 5
7 உன் படிப்பு உன் முடிவு
திரு. தங்க பாண்டியனுடன் 12
16 உயர்கல்வி என்னும் பயணத்தில்...
அமெரிக்க அதிபர் ஜார்ஜ் வாஷிங்டன் 18
19 நம் காலத்தின் மாமேதை
வ.உ. சிதம்பரம் பிள்ளை 20
23 Scholarship for Graduate Students
5-ல் வளையாதது 50-ல் வளையாது 27



## உங்களோடு நான்...

படிக்கின்ற காலத்திலே கனவுகளோடு படித்தவர்கள் மகிழ்ச்சியா +2 தேர்வினை எதிர் கொண்டிருப்பார்கள். எவ்வளவு மதிப்பெண் கிடைக்கும்? என்ன படிக்க வேண்டும்? எங்கு படிக்க வேண்டும்? என்கின்ற தெளிவோடு விடுமுறையை செலவழித்துக் கொண்டிருப்பார்கள். அத்துடன் நுழைவுத் தேர்வுகளுக்காக தங்களைத் தயாரித்துக் கொண்டிருப்பார்கள். உங்கள் கனவு நனவாக – உங்களை அகமகிழ வாழ்த்துகிறது விஷன்ஸ் இந்தியா.

அதே நேரத்தில் எந்தவி தெளிவும் இல்லாமல், மார்க் வரட்டும் பார்த்துக் கொள்ளலாம் என்கிருக்கும் இளையோரை அக்கறையுடன் நோக்குகின்றது.

கனவு உண்டு, ஆனால் நிதி ஆதாரங்கள் இலலை, வழிகாட்ட யாருமிலலை என்று வேதனைப்படும் தம்பி தங்கையர்களையும் கரிசனையோடு பார்க்கின்றது.

உங்களுக்காக இந்த இதழ்! வெளியாகும் கட்டுரைகள் உங்களுக்கு வலுவூட்டும். குவிந்து கிடக்கும் தகவல்கள், குறிப்பாக கல்வி உதவித் தொகை குறித்த விவரங்கள் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உயர் வழிகாட்டுதல் தேவைப்படுவோர் கூப்பிடுங்கள் பேசுவோம்.

> **வெற்றி**
> உனக்காகக் காத்திருக்கிறது.
> முதல்படியை எடுத்து வை.
> அடுத்தபடி சென்றிட வலிமை
> உனக்குள்ளிருந்து
> உதயமாகும்.



**வாழ்த்துக்களுடன்...**

*தே. சைலட் மோனி*



# The Choice is Yours



**காலமும் நேரமும் கடந்து போகும். நீ விரும்பிய வாழ்க்கையை வடிவமைப்பதில் நேரத்தை செலவழிக்கலாம் அல்லது நீ விரும்பாத வாழ்வை வாழ்வதில் உன் நேரத்தை செலவழிக்கலாம். முடிவு உன் கையில் ... *(The Choice is Yours)***

அன்பிற்கினிய நண்பர்களே!

உன்னுடைய எதிர்காலம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று தீர்மானிப்பது எளிதான காரியம் இல்லை. நீ உன் வாழ்வில் என்ன செய்யப்போகின்றாய்? உனக்கு இருக்கின்ற வாய்ப்புகள் என்ன? நான் ஏன் இப்போது தீர்மானிக்க வேண்டும்? – இவைகள் அனைத்தும் பொதுவான கேள்விகள். வாழுகின்ற பலருமே, வாழ்ந்து முடித்த பலரும் இந்த கேள்விகளுக்கு விடை தேடியதில்லை என்பது நிஜம். அதே நேரத்தில் பலரும் வாழ்வின் பல்வேறு தருணங்களில் மிக முக்கியமான முடிவுகளை எடுக்கின்றார்கள். அனைத்து கேள்விகளுக்கும் இப்போதே விடைத் தெரிந்திட வேண்டும் என்றில்லை. வாழ்வில் குழப்பமான நிலையில் இருப்பதும் O.K.தான்.

என்ன படிக்க வேண்டும்? என்ன வேலை பார்க்க வேண்டும்? என்பது நமது அனுபவங்களின் அடிப்படையில் பெற்றிடும் அறிவின் அடிப்படையில் மாறுதலுக்கு உட்படும். அத்தகைய மாறுதல்களுக்கும் நாம் தயாராக இருக்க வேண்டும்.

ஆனால் நமது எதிர்காலத்தை வடிவமைப்பது குறித்த சிந்தனைகளில் இப்போதே ஈடுபடுவது நல்லது. உன்னுடைய எதிர்காலம் குறித்த சிந்தனையில் ஈடுபட்டுள்ளாயா? அதன் வடிபம்/பிம்பம் என்ன? உன் கனவு என்ன? சிந்திக்க ஆரம்பித்து விடு. அப்போதுதான் அதற்காக திட்டமிடுதலை செய்திட முடியும். உன் திட்டங்களும் மாறுதலுக்கு உட்படலாம். ஆனால் நீ திட்டமிடுதலை துவங்கியாக வேண்டும்.

வாழ்வைத் திட்டமிடுதலுக்காக இரண்டு செயல்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இந்த செயல்பாடுகளை மீண்டும் மீண்டும் செய்து பார். தெளிவு பிறக்கும். உனக்குள் ஒரு திறன் உருவாகும். அதுவே அத்திட்டத்தின் நடைமுறைப்படுத்துவதற்கான உந்து சக்தியாக அமைந்திடும்.

உன்னுடைய வேலை/பணி எத்தகையதாக இருக்க வேண்டும் என்கின்ற முடிவே இப்போது நீ என்ன படிக்க வேண்டும் என்பதினை தீர்மானிக்கின்றது. உன் முடிவு, உனது விருப்பமாக இருந்திட வேண்டும். உன் முடிவு, உன் விருப்பமாக இருந்திட வேண்டும். உன் தேர்வும், உன் முடிவும் (decision) மதிப்பீடுகளின் மேல் எழுதப்பட்டதாகவும், நிறைய தகவல்களின்அடிப்படையில் எடுக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

## செயல்பாடு 1

### என்னுடைய எதிர்கால திட்டம் (தொழில் சார்ந்த) குறித்த வரைபடம்

என் எதிர்கால (தொழில் / வேலை) குறித்த இலக்கு

..................................................................................

..................................................................................

..................................................................................

இலக்கை நோக்கிய பயணத்தில் வரும் சவால்களும், தடைகளும்

..................................................................................

..................................................................................

..................................................................................

சவால்களை எவ்வாறு சந்திக்கப் போகின்றேன்

..................................................................................

..................................................................................

..................................................................................

மேலே குறிப்பிட்டுள்ள செயல்பாடுகளை செய்த பிறகு உன் வாழ்வின் இலக்கு – எதாவது மாறுதலுக்கு உட்பட வேண்டும் என நீ விரும்புகின்றாயா?

ஆம் எனில் – விளக்கிடு:

..................................................................................

..................................................................................

..................................................................................

அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்ன?

உன் எதிர்கால கனவினை அடைந்திட சரியான படிநிலைகளை வகுத்திட வேண்டும்.

..................................................................................

..................................................................................

..................................................................................

..................................................................................



யார் உங்களை வெறுக்கிறார்களோ, விமர்சனப்படுத்துகிறார்களோ, புறக்கணிக்கிறார்களோ, அவமானப்படுத்துகிறார்களோ
அவர்கள் முன்பு வாழ்ந்து காட்டுங்கள், வென்று காட்டுங்கள்... அதுதான் உண்மையான வாழ்க்கை!

## செயல்பாடு 2

**உனது கனவு வேலைக் குறித்து தெளிவு வேண்டும்.**

- எத்தகைய வேலைகளைப் பற்றி உனக்குத் தெரியும்?
- உன் சமூகத்தில் அத்தகைய வேலை வாய்ப்புகள் உள்ளனவா?
- உனக்குப் பிடித்த வேலைகள் என்ன?

**உனக்குத் தெரிந்து நல்ல வேலையில் உள்ள ஒருவரிடம் கலந்துரையாடு**

- நீ பார்க்கும் வேலைக் குறித்து முதலில் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?
- இதற்காக நீங்கள் மேற்கொண்ட படிப்புகள் என்ன?
- இந்த வேலைக்குத் தேவைப்பட்ட திறன்கள் என்ன? அவைகளை எவ்வாறு வளர்த்துக் கொண்டீர்கள்?
- உங்கள் சம்பளம்?
- உங்களின் தினசரி பணி என்ன?
- உங்கள் வேலையில் உங்களுக்கு மிகவும் பிடித்தது எது?
- சவால்கள் என்ன? ஏமாற்றங்கள் என்ன?
- இப்பணியில் உயர்நிலை (உயர்பதவி) அடைந்திடுவதற்கான வாய்ப்புகள் என்ன?


இதேபோல உனக்குத் தெரிந்த, பிடித்த நபர்களிடமும் இந்தக் கேள்விகளை கேட்டு பதில்களை தொகுத்துக் கொள். உனக்கு கிடைத்த விடைகளை நண்பர்களிடம் பகிர்ந்து கொள். தெளிவான முடிவெடுக்கத் தேவையான வழிகாட்டுதல்களை இவைகள் உனக்குக் கொடுக்கும்.



உன் முடிவு உனதானது. நீ எடுக்கும் முடிவுகளின் அடிப்படையிலேயே உன் எதிர்காலம் அமைந்திடும். குடும்பம், கலாச்சாரம், சமூகக் கடமை, பணம், நாம் வாழும் இடம், திறன்கள், அனுபவங்கள் போன்றவைகளை முடிவுகள் எடுக்கும்போது நாம் கருத்தில் கொண்டிருக்க வேண்டும்.

**உனக்கு இருப்பது ஒரே ஒரு வாழ்க்கைதான்.**
**அதை மகிழ்ச்சியாக, சரியாக வாழ்ந்திடு.**
**உன்னால் முடியும்,**
**உன் திறமைகளின் மீது நம்பிக்கை வைத்திடு.**

**வெற்றி பெற்றிட என் வாழ்த்துக்கள்...**




விஷன்ஸ் செயல் இயக்குநர்

## சிறுகதை

“இப்படி கவனம் இல்லாம ஜியாமெட்ரி பாக்ஸை தொலைச்சிட்டு வந்து நிக்கிறியே, இது தப்பு கோகுல். இருந்தாலும் உன்னை மன்னிச்சுடுறேன். நாளைக்கு வேற ஜியாமெட்ரி பாக்ஸ் வாங்கித் தரேன்“ என்று மகனிடம் தன் மனைவி ரேவதி சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தான் கணேசன்.




ரேவதி இப்படி சொல்வது முதல் முறை அல்ல. சில வருடங்களாகவே அவள் கோகுலிடம் இப்படித்தான் நடந்து கொள்கிறாள்.

ஒருமுறை கோகுல் கணக்குப் பாடத்தில் தோல்வியடைந்தபோது இப்படித்தான் அவனைத் திட்டிவிட்டு, பிறகு அவனிடம் மன்னிப்பதாகச் சொன்னாள்.

படிக்காமல் விளையாடிவிட்டு வந்தாலும், வீட்டுப் பொருட்களைக் கைதவறி உடைத்தாலும் இப்படித்தான் முதலில் அவன் செய்தது தப்பு என்று கண்டித்துவிட்டு, பிறகு மன்னித்து விடுவதாகச் சொல்லிவிடுவாள் ரேவதி.

“ஏன் ரேவதி, கோகுல் செய்யிற தப்புகளை எப்படியும் மன்னிக்கத்தான் போகிறாய். பிறகு எதற்காக அவனிடம் அது தப்புன்னு சொல்லித் தேவையில்லாம குற்ற உணர்ச்சியை தூண்டி விடறே?” என்று ரேவதியைத் தனியாக அழைத்துக் கேட்டான் கணேசன்.

“கோகுல் இப்ப டீன்ஏஜ்ல இருக்கான். இனி மேற்படிப்பு, வேலைன்னு வாழ்க்கையில எத்தனையோ பேரைச் சந்திக்கப் போறான். எத்தனையோ சூழல்களை எதிர்கொள்ளப்போறான். இப்ப அவன் செய்யிற தப்புகளை தப்புன்னு நாமதான் சுட்டிக் காட்டணும். அப்பதான் அதை இனி செய்யாம கவனமா இருப்பான். அதே நேரம் அவனை நாம் மன்னிக்கிறோம்னு அவனுக்குத் தெரியனும். அப்பதான் மத்தவங்க அறியாம செய்யிற தப்புகளை அவன் மன்னிக்கவும் கத்துக்குவான். தப்பு செய்யாதவங்க மட்டுமில்லீங்க, மற்றவங்களை மன்னிக்கவும் தெரிஞ்சவங்கத்தான் முழு மன ஆரோக்கியத்துடன் வாழ முடியும். அதுக்காகத்தான் இந்தப் பயிற்சி” என்று சொன்ன மனைவி ரேவதியை புருவம் உயர்த்தி மகிழ்ச்சியோடே பார்த்தான் கணேசன்.

முனைவர் க. பழனித்துரை






# உன் கல்வி உன் பொறுப்பு

கல்வி ஒரு கருவி. அதை உபயோகிப்பவரின் திறமையைப் பொறுத்து அது விளைவுகளை ஏற்படுத்தும். அதைக் கையாள்வதற்கு நமக்கு ஒரு புரிதல் வேண்டும். தன்னம்பிக்கையைத் தர வேண்டும். கல்வி கற்றிருப்பதற்கு அடையாளம் தன்னம்பிக்கை பெற்ற மனிதராக விளங்குவது. கல்வி தொடர்ந்து ஒருவரின் பார்வையை, மனோபாவத்தை, நடத்தையை, திறனை மாற்றி உயர்த்திக் கொண்டேயிருக்கும். மேற்கூறியவைகள் நடக்கவில்லை என்றால், ஒருவர் பெறுவது கல்வி அல்ல, கல்வி என்ற பெயரில் ஒரு சான்றிதழ் வாங்கும் ஒரு நிகழ்வு.

பலர் கல்வி கல்விக்கூடத்தில்தான் கிடைக்கும் என நினைக்கின்றனர். கல்வி என்றால் என்ன என்பது தெரிந்தவர்களுக்குக் கல்விக் கூடத்தில் மட்டும் உருவாவது அல்ல, அது தன் வீட்டில் கிடைக்கும், நாம் செயல்படும் இடங்களில் நண்பர்களிடம் கிடைக்கும், நாம் பணிபுரியும் இடங்களில் கிடைக்கும் என்பதை நாம் புரிந்து செயல்படுவர். நல்ல கல்வியை நல்ல தாய் தரக்கூடும், நல்ல தந்தை தரக்கூடும். அதை நாம் புரிந்து கொண்டு அதை பெற்றுக்கொள்ளும், கிரகித்துக் கொள்ளும் திறமையில் அது நமக்குக் கிடைக்கும்.

என் தாய் பள்ளியைப் பார்த்தது கிடையாது, பள்ளிக்குச் சென்றது கிடையாது. ஆனால் பள்ளியில் எனக்குக் கற்றுத் தராததை என் தாய் கற்றுத் தந்தார். அவர் பள்ளி சென்றதே இல்லை. ஆனால் கற்றுக் கொள்ளும் முறைமையைக் கற்றுக் கொடுப்பத்தில் அவருக்கு நிகர் அவரே. என் தாய் அதிகாலை எழுவது என்பது எவ்வளவு ஒருவனுக்குச் சிறப்பைத் தரும் என்பதை எனக்குக் கற்றுத் தந்தார். அதிகாலை எழுவது பலருக்கு துயரம். ஆனால் அது எனக்கு இனிமை. ஏனென்றால் அதன் பயனை நான் அனுபவிப்பதால், அதைக் கற்றுத் தரும் முறைமையே தனியானதுதான். சிறுவயதில் அதிகாலை 4.30 மணிக்கு எழுந்து வீட்டு வேலைகளைப் பார்த்துவிட்டு படிக்க என்னைப் பழக்கியது என் தாய். இன்றளவும் என் வாழ்க்கையில் கடைபிடித்து வருகிறேன். என் வாழ்வில் சிறந்த படைப்புகளை உருவாக்கியதில் காலை நேரச் செயல்பாடுகள் மிக முக்கிய பங்களிப்பைச் செய்துள்ளது என்றால் அது மிகையாகாது.

முன்னேறத் துடிக்கும் ஒவ்வொருவரும் கல்வி என்பதை எந்த இடத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். தேவை கற்றுக் கொள்ளும் மனோபாவம், கற்றுக் கொள்ளும் முறைமை, கற்றுக் கொள்ளும் ஓர் தாகம். கற்றுக்கொள்ளும் ஓர் மனோபாவமும் முறைமையும் தெரிந்துவிட்டால் வாழ்க்கை என்பது கல்வி மயமாகி நாம் செயல்படும், எல்லா இடங்களுமே கல்விக்கூடமாகவே மாறிவிடும். கல்வி என்பது உள்ளே இருக்கும் ஆற்றலை வெளிக் கொணர்வதுதான். இந்தப் பணியைத்தான் ஆசிரியர்கள் செய்ய வேண்டும். இந்தப் பணியைத்தான் கல்விக் கூடங்கள் செய்ய வேண்டும். ஆசிரியப் பணியை ஆசிரியர் என்ற பெயரிட்டவர்தான் செய்ய முடியும் என்று எந்த வரையறையும் இல்லை. சில நேரங்களில் அதை நம் தாய் செய்ய முடியும். சில நேரங்களில் நம் தந்தை செய்ய முடியும், பல நேரங்களில் நம் நண்பர்கள் செய்ய முடியும், சில நேரத்தில் மதகுருமார்களால் செய்ய முடியும். நம் இளைஞர்கள் இன்று வளர்த்துக் கொள்ள வேண்டியது கற்றுக்கொள்ளும் மனோபாவத்தை. அந்த மனோபாவம் இருந்தால் யார் தன்னையறிய உதவுகின்றார்களோ அவர்களையே ஆசிரியர்களாக பாவித்து தன்னைக் கண்டுபிடித்து தன் திறனை வளர்த்துக்கொண்டுவிடுவார்கள். தன் இயல்புக்கும் திறனுக்கும் ஏற்ற கல்வியை ஒருவர் தேர்ந்தெடுத்தால் அதில் தன் திறன் வளர்ப்பை எவ்வளவுப் போராட்டமாக இருந்தாலும் அதை மகிழ்ச்சியுடன் நடத்திக் காட்டுவார். திறன் வளர்த்தல், ஆற்றல் பெருக்கம், அறிவுப் பெருக்கம் என்பதெல்லாம் கடின உழைப்பிலும் போராட்டத்திலும் நடைபெறும் நிகழ்வு. ஆனால் அதையே குறிக்கோளாக உள்வாங்கிச் செயல்படுபவர்களுக்கு அதுவே ஒரு ஆனந்தம் தரும் செயல். ஏனென்றால் தான் செய்கின்ற ஒவ்வொரு மணித்துளிச் செயல்பாட்டிலும் விளைகின்ற விளைவினை தான் உணர்வதால், புரிந்து கொள்வதால் எல்லாச் செயல்பாடுகளும் அவருக்கு இனிமை தரும்.



தோற்றாலும் நம்பிக்கையோடு இரு. ஆனால்... யாரையும் நம்பி தோற்றுவிடாதே.
அதன் வலி மரணத்தைவிட கொடியது...!

நல்ல பெற்றோர் யார் என்றால் தன் குழந்தைகளின் திறன் எதில் இருக்கிறது என கண்டுபிடித்து அதை அவனுக்குக் காண்பித்து அவனை அதை உணரச் செய்து அவர் வழியில் செயல்பட அனுமதிப்பவர்களே. இன்றைய சூழலில் கல்வி என்பதை மதிப்பெண் பெறுதல், சான்றிதழ் வாங்குதல் என நாம் உறுதி செய்து செயல்படுத்தி வருகின்றோம்.

பொதுவாக கல்வி என்பது

**அறியாதது அறிதல்,**
**புரியாதது புரிதல்,**
**தெளியாதது தெளிதல்,**
**உணராதது உணர்தல்.**

மேற்கூறியவைகளை செய்வதற்குத்தான் கல்வி தேவை. வள்ளுவன் சொல்லுகின்றபோது அறிவை கல்வி தரும், அது ஒருவரை பாதுகாக்கும் கருவி என்று கூறுகின்றான். இதன் அடிப்படை, மானுடராகிய நாம் உயர்வதற்கு, நம்மைப் பக்குவப்படுத்திக் கொள்வதற்கு, நெறிப்படுத்திக் கொள்வதற்கு கல்வி தேவை என்று வள்ளுவன் கூறுகின்றான். கல்வி என்பது சான்றிதழ் அல்ல. கல்வி என்பது ஒருவனின் உள்ள வளர்ச்சி, மன வளர்ச்சி, திறன் வளர்ச்சி மற்றும் நடத்தை மாற்றத்தைக் கொண்டுவரும் கருவி என்பதை நாம் உணர்ந்து செயல்பட வேண்டும். இந்த வளர்ச்சிகளை ஒருவரிடம் கொண்டுவர வடிவமைக்கும் ஒரு கருவிதான் கல்வி. அது இன்று பெருமளவில் கல்விச்சாலைகளில் நடைபெறுகின்றது. எது நமக்குச் சாத்தியப்படுகிறதோ, புலப்படுகிறதோ அதைத் தேர்ந்தெடுத்து அதில் தன் முழு சக்தியையும் பயன்படுத்தினால் எந்தப் படிப்பும் ஒருவரை முன்னுக்குக் கொண்டு வந்துவிடும். எந்த மனிதரும் ஒரு பட்டத்தால் அல்லது படிப்பால் மட்டும் உயர்வது கிடையாது. லட்சத்தில் சம்பாதிக்கலாம் என கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்துவிட்டு பத்தாயிரம் ரூபாய் சம்பளத்தில் வேலை செய்யும் ஆயிரக்கணக்கானோரை நாம் பார்த்து வருகின்றோம். ஒரு உச்ச நீதிமன்ற வழக்கறிஞருக்கு குமாஸ்தாவாக இருந்து மாதம் ஒரு லட்சம் ரூபாய் சம்பளம் வாங்குவோரை நாம் பார்த்து வருகிறோம். எதுவும் படிக்க வரவில்லை, நல்ல சரக்கு மாஸ்டரிடம் வடை போடுவதை மட்டும் கற்றுக்கொண்டு விதவிதமான வடை தயாரித்து அந்த ஊரில் உள்ள அத்தனைக் கடைகளுக்கும் வடை விற்று எண்பது லட்ச ரூபாய் வீடு கட்டி வசிக்கும் ஒருவரையும் பார்க்கும்போது எது ஒருவருக்கு வெற்றியைத் தருகிறது என்றால் தான் விரும்பியதை தேர்வு செய்து, விரும்பிய விதத்தில் செயல்படும்போது வெற்றி நம்மைத் தழுவுகிறது.

ஒரு நண்பரின் மகன் M.E. படித்துவிட்டு ஒரு தனியார் பொறியியல் கல்லூரியில் ரூபாய் 15,000 சம்பளத்தில் வேலைக்கு சேர்ந்துள்ளார். அந்த நண்பரின் வீட்டில் வீட்டு வேலை செய்யும் பணிப்பெண்ணின் மகன் பெங்களூருவில் வால்வோ கார் ஓட்டப் பயிற்சி எடுத்துவிட்டு ரூ. 50,000 சம்பளம் வாங்குவதைக் கேட்டபோது இந்த இருவர் பெற்ற கல்வியில் உள்ள வித்தியாசங்களைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

படிக்கும் இளைஞர்களிடம் இருக்கும் புரிதலும், அவர்களின் பெற்றோர்களிடம் இருக்கும் அறியாமையும்தான் எனக்குத் தெரிந்தது. ஒரு டாக்டரின் மகன் ய.றீஉ., கணிதம் படிக்க வேண்டும் என்று கூறினார். அப்பா விடுவதாக இல்லை, கோடியில் பணம் செலவழித்து மகனையும் டாக்டர் ஆக்கி தன்னுடைய மருத்துவமனையிலேயே ஒரு பகுதியில் டாக்டராக அமர்த்தினார். எந்த முன்னேற்றமும் இல்லை. கடைசியில் வயதான பிறகு அந்த டாக்டர் தன் மகனை மேனேஜராக மாற்றி அந்த மருத்துவமனையை மற்ற டாக்டர்களை வைத்து இயங்கச்செய்தார்.

இரு நண்பர்கள் ஒரே பள்ளியில் படித்து வெளியேறும்போது இருவரும் B.A., படிக்க எண்ணினார்கள். ஆனால் ஒருவரின் தந்தை விடுவதாக இல்லை. பொறியியல் படிக்க வேண்டும். அதுவும் கம்ப்யூட்டர் படிக்க வேண்டும் என்றார். ஒருவர் B.A., பொருளாதாரம் பக்கத்தில் உள்ள கல்லூரியில் படிக்கச் சென்றார். அவர் நண்பர் கோயம்புத்தூரில் உள்ள தனியார் கல்லூரியில் பத்து லட்சம் கொடுத்து B.E., சீட் வாங்கி படித்துவிட்டு வேலை தேட முயன்றார். கிடைத்தது கால் சென்டர் வேலை. B.A., பொருளாதாரம் படித்துவிட்டு, டெல்லி சென்று M.A., பொருளாதாரம் படித்தார். படித்தபோது அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் M.S., பொருளாதாரம் படிக்க நிதி உதவி வேண்டி ஒரு நிறுவனத்திற்கு விண்ணப்பித்திருந்தார். கிடைத்த உதவி, போட்டித் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்றிருந்ததால் நல்ல பல்கலைக் கழகத்தில் அவருக்கு இடம் கிடைத்தது. படித்தார், படிப்பு முடிந்தவுடன் உலக வங்கிக்கு விண்ணப்பித்து வேலை பெற்றார். இன்று அவர் டெல்லியில் உலக வங்கியில் வேலை செய்து வருகிறார். மதுரையில் சாதாரணக் குடும்பத்தில் பிறந்த மாணவருக்கு அந்த வாழ்க்கை வெளிச்சம் தெரிந்தது, அதற்குத் தடையில்லை, வெற்றி பெற்றார். மற்றவருக்கு தந்தையின் ஆசையை நிறைவேற்ற பொறியியல் படிக்கச் சென்றார். ரூ.20,000-ல் கால் சென்டரில் வேலை. இது யாரால் வந்தது?




அனைவரும் பேசுவது இளைஞர்கள் நாட்டிற்கு வழிகாட்ட வேண்டும் என்று. எந்த இளைஞன் தனக்கு வழி தேடிக்கொள்கின்றானோ, தேடிக் கொண்டிருக்கின்றானோ, அவனால் மட்டும்தான் மற்றவருக்கு வழிகாட்ட முடியும். தன் வாழ்க்கைக்கு பொறுப்பேற்காத எந்த இளைஞனும் மற்றவருக்கு உதவ முடியாது. **முதலில் நம் இளைஞர்கள் தன் படிப்பிற்குத் தான் பொறுப்பேற்ற வேண்டும்.**



# உன் படிப்பு உன் முடிவு



## முட்டுக்கட்டைகளை ஊன்று கோல்களாக – மாற்றிடு

**Census 2011** – சுட்டிக் காட்டும் புள்ளி விவரங்கள் – நமது பாரதத்தில் கல்வி இன்னும் அனைவருக்கும் உரியதாகவில்லை என்பதினை உறுதிப்படுத்துகிறது.

- 78 லட்சம் குழந்தைகள் பள்ளியில் படிக்கும் போதே வேலை செய்து சம்பாதிக்க நிர்பந்திக்கப் படுகின்றார்கள்.
- 8.4 கோடி குழந்தைகள் பள்ளிக்கே செல்வது இல்லை.
- வேலை செய்துகொண்டே படிக்கும் குழந்தைகளில் 57 சதவீதம் பேர் சிறுவர்கள்.
- 6 வயதே நிரம்பிய குழந்தைகளும் வேலை செய்திட கட்டாயப்படுத்தப்படுகின்றார்கள்.
- 8.4 கோடி குழந்தைகளில் 20 சதவீதம் பேர் கல்வி உரிமைச் சட்டத்தின் வயது வரம்பிற்கு உட்பட்டவர்கள்.

இது ஒருபுறம் இருக்க, அத்தனை தடைகளையும் தாண்டி பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு கல்லூரிக்கோ, தொழிற்கல்வி நிலையங்களுக்கோ படிக்கச் செல்லுமுன் 70 சதவீதம் மாணாக்கர்களின் வாழ்வு போர்க்களமாகவே மாறி விடுகிறது.

பள்ளி இறுதிப் படிப்பு படிக்கும் மாணாக்கர்களை சந்திக்கும் நிகழ்ச்சியொன்று விஷன்ஸ் இந்தியா நிறுவனம் சார்பில் கிராமம் ஒன்றில் நடத்தப்பட்டது. அந்த சந்திப்பில் 12-ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த சுதா என்ற மாணவியும் பங்கேற்றார். அவளிடம் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு என்ன படிக்கப் போகின்றாய் என்று கேட்டேன். சிறிது நேரம் மௌனம், சிறிது வெட்கம். அதன் பிறகு என்னுடைய அக்கா வீட்டுக்காரர்தான் முடிவெடுப்பாங்க என்றார்.

பல மாணவர்களின், மாணவிகளின் நிலைமை இதுதான். என்ன படிப்பது என்பதினைக் கூட தீர்மானிக்க முடியாத நிலையில் நம்முடைய மாணவர் சமுதாயம் இருப்பது சாபக்கேடானது.

### பள்ளி இறுதி வகுப்பில் பயிலும் மாணாக்கர்களால் உயர்கல்வி குறித்து ஏன் முடிவெடுக்க முடியவில்லை?

### 1 தன்னுடைய பெற்றோர்கள் / உறவினர்கள் மேல் வைத்திருக்கும் அபாரமான நம்பிக்கை



உன்னுடைய இந்த நம்பிக்கையை குறை கூறுவதற்கில்லை. பெற்றோர்கள், உறவினர்கள் உன்மீது அக்கறை உள்ளவர்களே! இதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. பெற்றோர்களின் கருத்துக்களுக்கு செவி கொடுப்பதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் உன்னை அன்பு செய்யும் பெற்றோர்களிடம், உறவினர்களிடம், உனது விருப்பம் என்ன? உனது கனவு என்ன? நீ என்ன படித்து – யாராக மாறப் போகின்றாய்? என்பதினைக் கூடத் தெள்ளத் தெளிவாக எடுத்துக்கூற தெரியாத அல்லது இயலாத நிலைதான் பரிதாபம்.

**உன் உறவினர்களிடமும், பெற்றோர்களிடமும் நீ வைத்துள்ள நம்பிக்கை, உன் கனவுகளை சிதைத்துவிடாமல் பார்த்துக் கொள்!**

### 2 பெற்றோர்களின், உறவினர்களின் விருப்புக்கு எதிராக முடிவெடுத்தால் உதவி செய்ய மாட்டார்கள் என்கின்ற பயம்



டீ குடிக்க 6 அல்லது 7 ரூபாய்க்கு கூட அம்மாவிடமோ அப்பாவிடமோ கெஞ்ச வேண்டிய சூழ்நிலையில், அவர்கள் விருப்பத்திற்கு மாறாக படித்திட முடிவெடுத்தால் ஒரு ரூபாய் கூட தரமாட்டார்கள் என்கின்ற அச்சம். நியாயமான பயம்தான். ஆனால் உன்னுடைய கல்வி ஆசைக்கு கூட தடை போடும் அளவிற்கு கல் நெஞ்சக்காரர்களா? உன்னுடைய பெற்றோர்கள். நம்பிட முடியவில்லை. அப்படியே இருக்கட்டும். நீ என்றாவது உன் தரப்பு வாதங்களை அமைதியாக, பாசமாக, உன் பெற்றோர்கள் அல்லது உறவினர்கள் முன்பு வைத்துள்ளாயா? ஆரோக்கியமான விவாதத்தில் ஈடுபட்டுள்ளாயா?

**தன் பிள்ளைகளின் நியாயமான கனவுகளைக் கூட புரிந்து கொள்ளாத கொடூரர்கள் அல்ல... பெற்றோர்கள்.!**

## 3 +2-வில் நீ தேர்ந்தெடுத்த பாடம் உன் விருப்பப் பாடமாக இல்லாமல் இருந்திருக்கலாம்




முதல் கோணல், முற்றும் கோணல் என்பார்கள். யாரோ சொல்வதைக் கேட்டு, அல்லது 10-ம் வகுப்பில் குறைந்த மதிப்பெண்கள் எடுத்த காரணத்தினால் 12-ம் வகுப்பில் விருப்பமில்லாத பாடத்தை எடுத்துப் படித்திருக்கலாம். அல்லது நீ படித்த பள்ளி, நீ கேட்ட குரூப்பை உனக்குத் தராமல் இருந்திருக்கலாம். உன்னுடைய பெற்றோர் உனக்குப் பதிலாக முடிவெடுத்திருக்கலாம்.

எது எப்படியோ! நீ விரும்பாத பாடத்தை விருப்பமில்லாமல் இரண்டு வருடம் படித்து முடித்துவிட்டாய். எனவே +2 படிப்பிற்குப் பிறகு உயர்கல்வியை தேர்ந்தெடுப்பதில் உனக்கு ஆர்வம் குன்றியுள்ளது. எதையாவது படிப்போம் - என்கின்ற முடிவுக்கு வந்து விடுகின்றாய்.

**எதையாவது படித்தால் வாழ்க்கையில் உயர்வது கடினம். காற்று வீசும் திசையில் செல்லாதே... உலக இயக்கத்தில் கரைந்து காணாமல் போய்விடுவாய்!**

## 4 கனவுகள் உண்டு... வழிகாட்டத்தான் யாருமில்லை...




திருப்புதல் தேர்வுகள் நடத்துவதில் போட்டிப் போடும் பள்ளிகள், வாழ்க்கையில் முக்கியமான கட்டத்தில் வந்து நிற்கும் இளையோரை அவரவர் திறமைக்கு ஏற்ப வழி காட்டுவதற்கு முனைவதில்லை. ஆசிரியர்களுக்கு நேரமில்லை, அதற்கான அறிவும் பலருக்கும் இருப்பதில்லை.

அதே நேரம் உயர்கல்விக்கான தேடல் உன்னிடம் இருந்ததா? நீ சென்று ஆசிரியர்களிடம் ஆலோசனைகள் கேட்டதுண்டா? தேடல் இல்லாமல் - எனக்கு வழிகாட்டவே யாருமில்லை என முடிவெடுத்து செயலற்ற நிலைக்கு செல்வது முட்டாள்தனம்.

**தேடு - இன்னும் தேடு - தேடிக்கொண்டேயிரு. யாரோ ஒருவர் உனக்காக 5 நிமிடங்கள் செலவழிக்க முன் வரலாம் - வழி காட்டலாம்! தேடல் இன்றி யாரையும் குறைசொல்வது நியாயமானதில்லை!**

## 5 இவன் / இவள் படிச்சு என்ன கிழிக்கப் போகின்றான்/ போகின்றாள் - போன்ற ஏளனங்கள் சோர்வடையச் செய்கின்றன



மாணவர்களைவிட அதிகம் பாதிப்புக்கு உள்ளாவது மாணவிகள். வீட்டுல இருக்கிறதுக்கு எதுக்காக படிக்க வேண்டும். படிச்சு என்ன செய்யப் போகிறாய்?ரொம்ப படிச்சா மாப்பிள்ளை கிடைக்கிறது கஷ்டம். வெளியில தங்கிப் படிச்சா பாதுகாப்பிற்கு உத்தரவாதம் யார் கொடுப்பது? - இது போன்ற உறவினர்களின் பேச்சுக்களை தினம்தினம் கேட்டுக் கேட்டு, என்ன படிச்சு என்னத்த கிழிக்க...! என்கின்ற நிலைக்கு மாணாக்கர்கள் வந்து விடுகின்றனர். அல்லது அவர்கள் சொல்வது நியாயமான கருத்துக்கள்தான் - எனக் கருதி அவற்றை உள்வாங்கிக் கொள்கின்றார்கள். **எனவே உயர்கல்வி குறித்து முடிவெடுக்க முடியவில்லை. அதற்கான விருப்பமும் இல்லை!**

**ஏளனங்கள் அறிவற்றவர்களின் கூவல்; அவற்றை உதாசீனப்படுத்தக் கற்றுக்கொள்!**

## 6 வாசிப்பு பழக்கம் அறவே இல்லை



குறைந்த பட்சம் செய்தித் தாளைக்கூட அதிகபட்ச மாணவர்கள் வாசிப்பதில்லை. தினமும் 10-20 ரூபாயாவது பாக்கெட் மணி வைத்திருப்பவர்கள், ஒரு தினசரி பத்திரிக்கைக்காக ரூ. 5 செலவழிப்ப தில்லை.

செய்தித்தாள்கள், புத்தகங்கள், உயர்கல்வி வழிகாட்டும் புத்தகங்களை வாசிக்காததால், எந்த படிப்பிற்கு எந்தளவிற்கு வேலை வாய்ப்புகள் உள்ளன - என்கின்ற தெளிவு 90 சதவீதம் மாணாக்கர்களிடம் இருப்பதில்லை. அடிப்படைய அறிவு இல்லாததால் முடிவெடுக்க முடியாத நிலை!

**வாசி, வாசிப்பு உன்னை வழிநடத்தும்!**

## 7 உணர்வுகளுக்கும் போதைக்கும் அடிமையாகியிருப்பது




வாழ்வின் மிகவும் முக்கியமான இளமைப் பருவம் குழப்பங்களும், எதிர்மறை சிந்தனைகளும், புரிதல் இல்லாத சூழல்களும் நிறைந்து காணப்படுகின்றது.

ஆண்-பெண் ஈர்ப்பு அதிகம் காணப்படும் பருவம் இது. நல்லது-கெட்டது பகுத்தறிய முடியாத பருவம். திட்டம் தீட்டி வாழ்க்கையை நகர்த்தும் பக்குவம் இல்லாத பருவம் இது. உணர்வுக் குவியல்களுக்குள் மூழ்கிக் கிடக்கும்போது முடிவெடுப்பதற்கான தெளிந்த சிந்தனை இருப்பதில்லை. குழப்பமான உணர்வுகளுக்குள் சிக்கித் தவிக்கும் போது - உயர்கல்வி குறித்து யார் முடிவெடுத்தால் என்ன என்கின்ற நிலைக்கு வந்து விடுகின்றோம்.

போதைப் பொருட்கள் - இது குறித்து எழுதவே மனதில்லை. 7-ம் வகுப்பு மாணவர்கள் கூட புகையிலை பழக்கத்திற்கு ஆளாகியிருப்பதை பார்த்துள்ளேன். இவைகளில் மனம் திளைக்கும்போது - உயர்கல்வி குறித்த நாட்டம் இல்லாமல் இருப்பதில் ஆச்சரியமில்லை.

**வேண்டாம் போதைப் பழக்கம்,**
**வாழ்வு சீரழிந்து போகும்!**

## 8 எவ்வளவு மார்க் கிடைக்கும் - தெரியாது...



தேர்வு முடியட்டும், மார்க் வரட்டும், மார்க் பார்த்துவிட்டு முடிவெடுக்கலாம் என்று இருக்காதே. நீ எடுக்கும் மார்க் உன் கனவினை நனவாக்குவதாக இருக்க வேண்டும். அதற்காக படிக்க வேண்டும். அதற்குத் தேவையான மதிப்பெண்கள் கிடைக்கும் என்று நம்பிட வேண்டும். அதைவிட்டுவிட்டு - எந்த விருப்பமும் கனவும் இல்லாமல் படிப்பதும், தேர்வு எழுதுவதும்- உனக்கு அழகல்ல. முடிவெடுக்க முடியாத நிலைக்கு இதுவும் ஒரு காரணம். உன் பெற்றோர்களிடம் உனக்கு இவ்வளவு மார்க் கிடைக்கும். நான் இந்தப் படிப்புதான் படிக்க ஆசைப்படுகின்றேன் - என்று சொல்லிட இயலாமல் இருப்பதால்தான், அவர்கள் தங்களுடைய முடிவுகளை உன்மீது திணிக்கின்றார்கள்.

**மேலே கூறப்பட்ட ஒவ்வொன்றும் தடைகள்தான். இவைகளை தாண்டுவதில்தான் உனது வாழ்வின் வெற்றியும் மகிழ்ச்சியும் அடங்கியுள்ளது.**

# முட்டுக்கட்டைகளை ஊன்றுகோல்களாக மாற்றிட...

## 1 பெற்றோர்களை உன் வசப்படுத்து




பெற்றோர்களை, உன் வசம் கொண்டுவருவது ஒரு கலை. இதில் எந்தவிதமான மாயமும் மந்திரமும் இல்லை. எப்படி வசப்படுத்துவது? அவர்களை உண்மையாக நேசி. அதுபோதும்! அவர்கள் உன் தரப்பு வாதத்தை கண்டிப்பாக உணர்வார்கள்.

என்ன படிக்க வேண்டும்? எங்கு படிக்க வேண்டும்? என்கின்ற தெளிவான சிந்தனை உனக்கு முதலில் வேண்டும். அந்தப் படிப்பை நல்ல ஒரு கல்லூரியில் படிப்பதற்கு தேவைப்படும் மதிப்பெண்கள் பெற்றிட கடுமையாக முயற்சிக்க வேண்டும்.

உன் பெற்றோரை உண்மையாக நேசித்தால், அவர்களிடம் நீ எதையும் மறைக்காதே. உன் எண்ணங்களை, கனவுகளை அவர்களுடன் பகிர்ந்து கொள். அதற்கான உன்னுடைய முயற்சிகளையும் பட்டியலிடு. அந்தப் படிப்பு படிப்பதனால் உன் வாழ்வு எவ்வாறு மாறும் என்று அவர்களுடன் பேசு.

உன்னுடைய நேர்மை முதலில் அவர்களுக்கு பிடிக்க வேண்டும். உன்னுடைய உழைப்பை அவர்கள் பாராட்ட ஆரம்பிக்க வேண்டும். அப்போது தான் உன் எண்ணங்களுக்கு செயல்வடிவம் கொடுக்க நீ எடுக்கும் முயற்சிகளை அவர்கள் உன்னிப்பாக கவனிக்க ஆரம்பிப்பார்கள்.

நீ விரும்பிய படிப்பு படிக்க நிறைய பணம் செலவாகும் என்று வைத்துக் கொள்வோம். உன் பெற்றோர்களிடம் அதற்குத் தேவையான நிதியாதாரம் இல்லை. இதைத் தெரிந்த நீ அவர்களை காயப்படுத்தக்கூடாது. படிக்க வைக்கக்கூட வக்கில்லை என்கின்ற வார்த்தைகளால் அவர்களைக் குத்தக்கூடாது. மாறாக, தேவையான பணம் கிடைத்திட என்ன வழியென்று யோசி. வங்கிகள் கடன்கொடுக்கின்றன. வங்கி மேலாளரிடம் சென்று பேசு. உன் கனவை பகிர்ந்து கொள். கல்வி உதவித் தொகை வழங்கும் நிறுவனங்களுக்கு விண்ணப்பங்கள் அனுப்பு. அரசுத் திட்டங்களை அலசு. வழி பிறக்கும். பணக்காரர்கள் மட்டும் தான் படிக்க முடியும், வாழ்வில் உயர்ந்திட முடியும் என்றால் அப்துல் கலாம் உருவாகியிருக்க மாட்டார்.

**உனக்குத் தெளிவிருந்தால்,**
**உன் கனவினை அடைந்திட**
**கடுமையாக உழைக்கும் மனவலிமையிருந்தால்,**
**பெற்றோர்களிடம் நட்பாய் பழகத் தெரிந்திருந்தால்**
**ஆயிரம் வாசல் திறந்திருக்கும் - உனக்காக!**

## 2 ஆதரவாளர்களைப் பெருக்கிக் கொள்

உன்னுடைய எண்ணங்கள் நிறைவேற வேண்டுமென்றால் உன்னுடைய கருத்துக்களை, ஆசைகளை, கனவுகளை அங்கீகரிப்பவர்கள் வேண்டும். அது யாராக இருக்க முடியும். உன் அப்பாவுடன், அம்மாவுடன் நெருக்கமாக இருக்கும் உறவினர்களாக இருக்கலாம். அவர்களுடைய நண்பர்களாக இருக்கலாம், பக்கத்து வீட்டுக்காரர்களாககூட இருக்கலாம். உன் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் தெரிந்தவர்கள் உனக்கும் அறிமுகமானவர்களாக இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.



யாருடைய பேச்சுக்கு, கருத்துக்கு அப்பா/அம்மா முக்கியத்துவம் அளிக்கின்றார்கள் என்று உன்னிப்பாக கவனி. யார் சொன்னால் கேட்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று மனதிற்குள் ஒரு மதிப்பீடு செய்து வைத்துக் கொள்.

உன்னுடைய தெளிவான உயர்படிப்பு எண்ணங்களை நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவர்களிடம் பேசு. அப்படிப்பினை பற்றிய அவர்களுடைய கருத்துக்களை கேள். உனக்கு இருக்கும் ஆர்வம், நாட்டம், அதற்காக நீ எடுக்கும் முயற்சிகளை அவர்கள் தெரிந்து கொள்ளட்டும். உன்னுடைய மதிப்பெண் பட்டியலை காண்பி.

நீ தேர்ந்தெடுக்க விரும்பும் துறையில் – பள்ளி நாட்களில் நீ செய்த சாதனைகளை அல்லது அதை நோக்கிய நகர்வுகளை அவர்களுடன் பகிர்ந்து கொள். அவர்களுக்கும் சில பொறுப்புகளைக் கொடு. நீ படிக்க விரும்பும் கல்லூரியை பற்றிய தகவல்களை திரட்டித் தர கேள். உனக்கு இருக்கும் உண்மையான ஆர்வத்தை புரிந்து கொண்டால் நிச்சயம் உன் பக்கம் நிற்பார்கள்.

இப்படியெல்லாம் திட்டமிட முடியுமா? இதுவெல்லாம் தேவையா? எனக் கருதாதே. திட்டமின்றி இலக்கினை அடைவது சாத்தியமில்லை. ஆதரவாளர்களைத் திட்டமிட்டு பெருக்கிக் கொள்.

## 3 நாலு பேரிடம் கலந்தாலோசி, அவர்களுடன் பேசு, அவர்களிடமிருந்து கற்றுக் கொள்

உயர்கல்வியைப் பற்றி தெளிவான முடிவெடுக்க நாலுபேரின் கருத்துக்களைக் கேட்பது மிகவும் அவசியம். உன் நண்பர்கள் வட்டத்திலிருந்தே உன் கலந்துரையாடலை ஆரம்பி. உனக்கு மிகப் பெரிய அளவில் உதவுவதற்கு உன் வயதொத்த நண்பர்களுக்கு தெளிவான சிந்தனை இல்லாமல் போனாலும், உன் எண்ணங்களுக்கு முதல் அங்கீகாரம் கொடுப்பவர்கள் நண்பர்கள், அடுத்து ஆசிரியர்கள். உனக்குப் பிடித்த ஆசிரியர்கள் உன்னைப் பாராட்டுபவர்கள். நீ நன்றாக வருவாய் என்று மனதார வாழ்த்திய ஆசிரியர்களிடம் பேசு. உன்னைப் பிடித்தவர்களுக்கு, உன் எண்ணங்களும் நிச்சயம் பிடிக்கும். உன் சிந்தனை செருவூட்டலுக்கு நிச்சயம் உதவுவார்கள். உன் எண்ணத்தில் குறைபாடுகள் இருந்தால் அதை நிவர்த்தி செய்வதற்கு உதவுவார்கள்.



அது போல உன் கிராமத்தில் படித்தவர்கள் யார்? வெளியூர்களில் வேலை பார்ப்பவர்கள் யார்? என்று பட்டியலிட்டு அவர்களிடம் சென்று உரையாடு. அவர்களின் அனுபவங்களைக் கேள். அவர்கள் சார்ந்திருக்கும் துறைகளைப் பற்றி தெரிந்திடு. அத்துறைகளில் வேலைபார்ப்பதற்கு அவர்கள் முன்னெடுத்த விஷயங்கள் எவை – என்பதினை அறிந்து மனதிற்கு அசை போடு.

**பேச பேச - உன் எண்ணம் வலுப்பெறும்,**
**உன் கனவினை நனவாக்குவதற்கான வழிகள்**
**தென்பட ஆரம்பிக்கும்.**

**முயற்சியின்றி வெற்றியில்லை,**
**ஒருவேளை நாலு பேரிடம் பேச பேச**
**உன் எண்ணங்கள்கூட மாற ஆரம்பிக்கலாம்.**

நீ முதலில் ஆசைப்பட்ட துறையினை விட்டு வேறு துறையினைக்கூட நீ தேர்ந்தெடுக்கலாம். அவ்வாறு தேர்ந்தெடுக்கும்போது அது உன் தேர்வாகத்தான் இருக்கும்.



இவ்வுலகில் நீங்கள் போட்டியிட்டு ஜெயிக்க வேண்டியது ஒரே ஒருவரைத்தான்... அது ... நேற்றைய நீங்கள்

## 4 நிறைய வாசி - நிறைய தேடு



வாசிப்பு பழக்கம் இன்று அடியோடு அழிந்து போகுமே என்கின்ற அச்சம் கல்வியாளர்களுக்கு உருவாகி யுள்ளது. ஒருவேளை வாசிப்பு வேறு பரிணாம நிலையை அடைந்துள்ளதோ என்றுகூட எண்ணத் தோன்றுகிறது.

வாசி, தேர்ந்தெடுத்து வாசி. உனக்குப் பிடித்த ஆர்வமானத் துறையை குறித்து நிறைய வாசி. நீ வாசித்தவைகளை பிறருடன் பகிந்து கொள். விவாதி, யோசி. வாசிக்க வாசிக்க உன் சிந்தனை கூர்மையடையும். உன் பார்வை விசாலமடையும்.

வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் கூகுள் – வலைத்தளத்தில் நுழைந்த தேடு. நீ படிக்க விரும்பும் படிப்பு, படிக்க விரும்பும் கல்லூரி, அக்கல்லூரியின் சாதனைகள் – அத்தனையையும் வாசி, உன் நண்பர்களுடன் அவைகளை விவாதி.

வாசிக்க வாசிக்க தெளிவு பிறக்கும். உன் தேடல் அதிகமாகும்.

பள்ளியில் படிக்கும் மாணாக்கர் ஒருவர் தினமும் செய்தித்தாள் வாசிப்பதை வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். முடிந்தால் தமிழ், ஆங்கிலம் செய்தித்தாள்களை தினமும் வாசித்திட வேண்டும். முக்கியமாக செய்திகளையும், கட்டுரைகளையும் ஆவணப்படுத்திக் கொள்ள வேண்டும். பொது அறிவை வளர்த்துக் கொள்வது மிகவும் முக்கியம்.

பத்திரிக்கை வாங்கிட பண வசதியில்லையெனில், நூலகத்திற்கு சென்று பத்திரிக்கை வாசிப்பதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

பள்ளிக்கூடம் இன்று பாடங்களை மட்டுமே படிப்பதற்கு நம்மைத் தூண்டுகிறது. பாடங்களை மனப்பாடம் பண்ணச் சொல்லி வற்புறுத்துகின்றது. புரிந்து படிப்பதற்கும், படித்தவைகளை பிறருடன் விவாதிப்பதற்கும், தங்களுடைய கருத்துக்களை பிறர் முன்னிலையில் பகிர்ந்து கொள்வதற்கும் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுப்பதில்லை.

முன்னேற வேண்டுமென்றால், உன் கனவு நனவாக வேண்டுமென்றால், உன் ஆர்வமான துறை ரீதியான புத்தகங்களை தேர்ந்தெடுத்து வாசி. தினமும் பத்திரிக்கை வாசி. நாட்டு நடப்புகளை பிறருடன் விவாதம் செய். உன் எண்ணமும் சிந்தனையும் செயல்பாடும் விசாலமாகும். நீ நினைத்ததை சாதிப்பதற்கான ஊக்கம் உனக்குக் கிடைத்துவிடும்.

## 5 படிக்க விரும்பும் கல்லூரிகளுக்கு சென்று வா

நீ படிக்க விரும்பும் கல்லூரியை பிறர் கூற அல்லது இணையதள வசதியுடன் தெரிந்து வைத்திருப்பாய். ஒரு நடை போய் வந்துவிடு. உன் கனவு கல்லூரியை சென்று பார்ப்பது உன் கனவினை அடைந்திடுவதற்கான உத்வேகத்தைக் கொடுக்கும். உன் பெற்றோரை அழைத்துக் கொண்டு போ. அங்கே போய் PRO (Public Relation Officer) மக்கள் தொடர்பு அதிகாரியை சந்தித்து உன் விருப்பத்தை வெளிப்படுத்து. உன் முடிவினை அல்லது எண்ணத்தினை அவருடன் விவாதி. அக்கல்லூரியின் சிறப்பம்சங்கள் என்ன? உள் கட்டமைப்புகள் என்ன? தொழில் நிறுவனங்களுடனான தொடர்புகள் என்ன? நூலக வசதி, விளையாட்டு வசதி, விடுதி வசதி – போன்றவைகளை விரிவாகத் தெரிந்து கொள். இது உன் உரிமை. பயப்படாதே, பயத்தை தூக்கித் தள்ளி வைத்துவிடு.




உனக்கு ஒரு ஐடியா கிடைக்கும். நீ நினைத்தது மாதிரி அக்கல்லூரி / பயிற்சி நிறுவனம் இருக்கிறதா? அல்லது உன் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றது போல் இல்லையா? வெளித் தோற்றங்கள் பல நேரங்களில் நம்மை ஏமாற்றி விட வாய்ப்பு உண்டு.

PRO அனுமதியுடன் அங்கு நீ விரும்பும் துறையில் படிக்கும் மாணவர்களுடன் / மாணவிகளுடன் உன் சந்தேகங்களுக்கு விடைத் தேடு. அவர்கள் மகிழும் காரணங்கள், அவர்கள் தங்களுக்குப் பிடிக்கவில்லை எனக் கூறுபவைகளை குறித்துக் கொள்.

முடிவெடு. நீ தேவையான தகவல்களை திரட்டியுள்ளாய். எனவே முடிவெடுப்பதற்கான முழு தகுதியும் உனக்கு உள்ளது. நீ ஏன் இக்கல்லூரியில் படிக்க விரும்புகின்றாய் என்பதற்கான காரணங்களை உன் பெற்றோர்களிடம் ஆணித்தரமாக எடுத்துக் கூற முடியும்.

**உன் தேடலின் முக்கியமான பகுதி இது.**

## 6 சேமிக்க ஆரம்பி...



பள்ளியில் படிக்கும் போதே உனக்கென்று ஒரு வங்கிக் கணக்கை ஆரம்பித்துவிடு. சிறுக சிறுக சேமிக்க ஆரம்பி. சிறு துளி பெரு வெள்ளம் என்பதை மறந்துவிடாதே. எனக்குத் தெரிந்த மாணவி ஒருவர் பி.ஏ., ஆங்கிலம் லொயாலோ கல்லூரியில் படிக்க ஆசைப்பட்டாள். அவளுடைய பெற்றோர் கல்லூரி கட்டணம் செலுத்துவதற்கு வசதியில்லை என மறுத்தனர். அப்போது அவள் அப்பாவிடம் சொன்னாள் – நான் சிறுக சிறுக சேமித்து வங்கியில் ரூ. 11,000/- வைத்துள்ளேன். அது என்னுடைய அட்மிஷனுக்கும். முதல் செமஸ்டருக்கும் போதும். நான் நன்றாகப் படித்து ஸ்காலர்ஷிப் வாங்கி விடுவேன். பெரும்பாலும் உங்களுக்கு சிரமம் வைக்க மாட்டேன் – என்று சொல்லி அழுதாள். பெற்றோருக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. **முட்டுக்கட்டையாக இருந்த பணம், இப்போது ஊன்று கோலாக மாறிவிட்டது.**

6-ம் வகுப்பிலிருந்தே சேமிக்க ஆரம்பி. பெரும்பாலும் கல்லூரி படிப்பதற்கு தேவையான பணத்தை சேமித்திருப்பாய். ஆரம்பி... அது சுகமான ஒரு அனுபவமாக இருக்கும். 10-ம் வகுப்பு படிக்கும்போது ரூ. 50,000 வட்டிக்கு கொடுத்த மாணவர்களையும் எனக்குத் தெரியும்.

கல்லூரி படிக்கும் போதே சிங்கிள் டீ – காசுக்காக அப்பாவிடம் கைக்கட்டி நிற்கும் இளையோரையும் தெரியும். முயன்று பார்.



## 7 பள்ளி நாட்களில் பாடத்திட்டம் சாரா நிகழ்வுகளில் (Extra-Curricular Activities) உன்னை அதிகம் ஈடுபடுத்து




உன் திறமைகளை நீ வெளிப்படுத்தினால்தான் பிறர் அறிந்து கொள்வார்கள். டீச்சர் ஒருமுறை தான் யாரெல்லாம் விளையாட்டு மற்றும் திறன் போட்டிகளில் கலந்து கொள்ளப் போகின்றீர்கள் என்று கேட்பார்கள். கையை முதலில் தூக்குவது நீயாக இருக்கட்டும். உன்னை பிறர் முன்மொழிய வேண்டுமென்று காத்திருக்காதே. நீதான் உன்னை முன்மொழிய வேண்டும்.

வாய்ப்பு கிடைத்தால் அத்தனை திறன் போட்டிகளிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்துக் கொள். நன்றாகத் உன்னை ஆயத்தப்படுத்தி, உன் திறனை வெளிப்படுத்து. பரிசுகளைத் தட்டிச் செல். நீ பரிசு வாங்குவதை பார்க்கும் உன் பெற்றோர் பூரித்து போவார்கள் தானே! பரிசு வாங்காவிட்டாலும் உன் ஆர்வமும் ஈடுபாடும் அவர்களை மெய்சிலிர்க்க வைக்கும்.

**உனக்கு ஆர்வமிருந்தால்,**
**அதை உன் பெற்றோர் உணர்ந்திருந்தால் -**
**அல்லது உன்னால் உணர வைக்கப்பட்டிருந்தால்**
**உன் உயர்கல்விக்கு அவர்கள் துணைநிற்பார்கள்.**
**இதில் எள்ளளவும் சந்தேகம் இருக்க முடியாது.**

## 8 உணர்வுகளுக்கும் போதைக்கும் அடிமையாகி விடாதே




பள்ளி இறுதி ஆண்டுகள் – உன் வாழ்வில் உன்னை உணர்வு ரீதியாக படாதபாடு படுத்தும். உன் பருவம் அது. விடலைப் பருவம். நல்லது கெட்டதாகப் படும். கெட்டது நல்லதாகப் படும். பெரியவர் பேச்சு எரிச்சலூட்டும், உன் வயது ஒத்தவர் பேச்சு ஆர்வமூட்டும். இனக் கவர்ச்சி அதிகம் கொப்பளிக்கும். உன் உடலையும், எதிர் பாலினத்தவர் உடலையும் தெரிந்து கொள்ளத் துடிக்கும். எதிர் பாலினத்தவருடன் நட்புடன் உரையாடுவதும், நண்பர்களாக இருப்பதும் தவறில்லை. ஆனால் அதையே காதல் எனக் கருதி, அது இல்லாமல் வாழ்வு இல்லை என நினைத்து உணர்வுகளுக்கு அடிமையானால் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடும்.

ஒவ்வொன்றிற்கும் ஒரு காலம் உண்டு.

**1. படிக்க..**
**2. வேலை பார்க்க...**
**3. உன்னை நிலைநிறுத்திக் கொள்ள...**
**4. காதலிக்க, திருமணம் முடிக்க...**

அதையதை அந்தந்த பருவத்தில் செய்வதுதான் சாலச் சிறப்பு. எக்காரணத்தைக் கொண்டும் புகையிலைக்கும், மதுவிற்கும் அடிமையாகி விடாதே. உன் கனவுகளை நீயே சிதைந்தவனாகி விடுவாய்.

## 9 தார்மீக போராட்டம் நடத்து

# AHIMSA

நீ படித்தது போதும். 12-ம் வகுப்பு படிக்க வைத்ததே பெரிய விஷயம். உன் மாமனை கட்டிக் கொள் – என்று கட்டாயப்படுத்தப் படுகிறாள் மாணவி ஒருவள். அவளுக்கோ மிகப் பெரிய சமூக சேவகராக வரவேண்டும் என்கின்ற ஆசை. எவ்வளவோ கெஞ்சிப் பார்க்கின்றாள், அழுது பார்க்கின்றாள். யாரும் அசைந்து கொடுத்தது போல் தெரியவில்லை. கல்லூரியும் தொடங்கிவிட்டது. இன்னும் அட்மிஷன் போடவில்லை. அவளுக்கு தெரிந்த ஒரே வழி – உண்ணாவிரதப் போராட்டம். மூன்று நாட்கள் தொடர்ந்து உணவு உண்ணவில்லை. மயங்கி விழுகிறாள். பெற்றோர் அழுகின்றனர். வேறு வழி தெரியவில்லை. படிக்க அனுமதிக்கின்றனர். இன்று கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கின்றாள்.

சில நேரங்களில் சிறிய தார்மீக போராட்டங்கள் நடத்துவதுக்கூட பயன்தரும். தார்மீகமாகவும், சாத்வீகமாகவும் அப்போராட்டங்கள் இருக்க வேண்டம். யாரையும் காயப்படுத்தி விடக் கூடாது.

**முட்டுக்கட்டைகள்**
**ஊன்றுகோல்களாக மாறும்...**
**நீ நினைத்தால்...**

**படிப்பு**
**உன் முடிவாக இருக்க வேண்டும்,**
**அது உன் கையில் தான் உள்ளது.**

**பிறருக்காக...**
**பிறர் விருப்பத்தை பூர்த்தி செய்திட**
**உயர்கல்வி படிக்காதே,**

**நெஞ்சில் சுமந்ததை**
**நனவாக்கிட**
**பாடுபடு...!**

**வாழ்த்துகிறேன்...**

**நட்புடன்,**



**தே.சைலட் மோணி**

இவ்விதழின் கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே.

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைதன்மைக்கு கனவு இதழின் நிர்வாகம் பொறுப்பல்ல.

படைப்புகளை பிரதி எடுத்துவைத்துக் கொண்டு எங்களுக்கு அனுப்பவும்.



# திரு. தங்க பாண்டியன்
## அவர்களுடன்
# நேர்காணல்

**திரு. தங்க பாண்டியன் அவர்கள் – ஒரு கிராமத்தான், தொழில் நுட்ப வல்லுநர், தமிழ் ஆர்வலர், காந்தியவாதி, இயற்கை விஞ்ஞானி, சமூகப் பணியாளர், Farm India நிறுவன இயக்குநர், ஆதவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் அறங்காவலர், கனவு கிராமம் இயக்கத்தின் தலைவர்.... அவரின் வாழ்க்கை இளையோருக்கு பாடம்.**

**உங்களது குழந்தை பருவம் பற்றி கூறுங்களேன்?**

■ நடுப்பட்டி கிராமத்தில் வேளாண் குடும்பத்தில் பிறந்தவன். நடுப்பட்டி கிராமம், திருச்சி மாவட்டம், வையம்பட்டி ஒன்றியத்தில் உள்ளது. என்னைப் பற்றி சொல்ல வேண்டுமென்றால், என் குடும்பத்தைப் பற்றியும் கூற வேண்டும். என் குடும்பத்திற்கு சில சிறப்புகள் உண்டு. எங்கப்பா சில புரட்சிகரமான செயல்பாடுகளை செய்தவர். 1958-60 களில் பெண்கள் ஜாக்கெட், ஆண்கள் சட்டை அணியும் பழக்கமில்லை. ஆகவே திருச்சியில் தையல் கற்று, கிராமத்தில் சிலருக்கும் தையல் கற்றுக் கொடுத்திருக்கின்றார். பெண்களும் ஆண்களும் மேல்சட்டை அணிய வேண்டும் என்பதை வலியுறுத்தினார். மின்சாரம் எங்கள் கிராமத்துக்கு 1962-ஆம் ஆண்டில் தான் வந்தது. அக்காலகட்டத்தில் பெட்ரமாக்ஸ் விளக்கை அறிமுகப்படுத்தினார். அனைத்து விழாக்களிலும், வைபவங்களிலும், நிகழ்ச்சிகளிலும் வெளிச்சம் இருப்பதை உறுதி செய்தார்.

என்னிடம் காணும் நிறைய விஷயங்கள் என்னுடைய தந்தையிடமிருந்து வந்தவை. அவருக்கு பெரியார் மீது, திராவிட கொள்கைகளின் மீது தீராதப் பற்று இருந்தது. கிராம நிகழ்வுகளில் ஒரு பெண்ணை முதன்மைப்படுத்த வேண்டுமென்றால், என் அம்மாவைத்தான் அழைப்பார்கள். ஏனெனில், அவர்கள் எப்போதும் பளிச்சென்று உடையணிந்து, கொண்டை போட்டு பூ வைத்திருப்பார்கள். அத்தகைய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன் நான்.

1970-இல் பஞ்சம் தலைவிரித்தாடியது. எங்கும் வறட்சி. மிகவும் ஏழ்மையான நிலைக்குத் தள்ளப்பட்டோம். கருஞ்சோளம் சாப்பிட்டுத்தான் வளர வேண்டிய நிலை. அது எனது பள்ளிக்காலம்.

**உங்களது பள்ளி வாழ்க்கை எவ்வாறு அமைந்தது?**

■ என்னுடைய பள்ளி வாழ்க்கையில் மறக்கமுடியாத ஆசிரியர் நல்லாசிரியர் ஆறு. கணபதி அவர்கள். நான் நடுப்பட்டி ஊராட்சி ஒன்றிய பள்ளியில்தான் படித்தேன். காலப்போக்கில் அது உயர்நிலைப் பள்ளியாக மாறியது. பள்ளியின் பயணத்திலே என் பள்ளிப் பயணமும் அமைந்தது. இப்போது மேல்நிலைப் பள்ளியாக உள்ளது. நான் +2 படிக்கவில்லை. அப்போது PUC. +1க்குப் பிறகு ஒரு வருடம் PUC கல்லூரியில் படிக்க வேண்டும். நாங்க தான் கடைசி PUC batch.



**நல்லாசிரியர் ஆறு. கணபதியின் அரிய பண்புகள்...**

■ நேர்மை. கொஞ்சம்கூட குறை காணாதளவிற்கு ஒரு நேர்மையாளர். அண்ணல் காந்தியடிகள் கூறுவதுபோல், யாருமே அவரை கவனிக்காத போதும் நேர்வழி வாழ்க்கைப் பயணம் செய்தவர். அவர் ஒரு மகான்.

■ தமிழ் ஆளுமை. அவருக்கு தமிழின் மீது அளவிடற்கரிய பற்று இருந்தது. அவர் சொல்வார் – சொல்லின் செல்வன் யாரென்றால் அது அனுமன். அந்த அனுமனுடைய சொல்வன்மைக்கு கம்பன் தன்னுடைய மொழி ஆளுமையை பயன்படுத்தியுள்ளார் என்பதை "கண்டனன் கற்பினுக்கு அணிய..." எனத் தொடங்கும் பாடல் வழியாக 8-ம் வகுப்பிலேயே எங்களுக்கு விளக்கியவர்.

**வறுமையின்போது பசி உங்கள் படிப்பை பாதித்ததா?**

■ இல்லை. பசி ஒருபோதும் என் படிப்பை பாதிக்கவில்லை. பசியினால் துவண்டதில்லை. சோறில்லை – ஆனால் வயிற்றை நிரப்புவதற்கு கம்போ, சோளமோ இருந்தது. கிழங்கு மட்டுமே உண்டு வாழ்ந்த நாட்களும் உண்டு. ஆனால் வறுமையின் பிற பாதிப்புகள் இருந்தன. குளிர் காலத்தில் போர்த்திக் கொள்ள படுக்கை விரிப்பு இல்லை, கோணிப் பையில் தான் படுத்திருப்போம். அம்மாவின் சேலை ஒரு வரப்பிரசாதம். வறுமை ஒருநாளும் பள்ளிப் படிப்பை பாதிக்கவில்லை.

**ஆங்கிலப் புலமை உங்களுக்கு பள்ளியிலேயே ஏற்பட்டதா?**

■ எனக்கு பெரிய ஆங்கிலப் புலமை இருப்பதாக தெரியவில்லை. ஆனால் நான்கு பேருக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுக்கும் அளவிற்கு திறமையுள்ளது. எங்களுக்கு கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஆதிசுவாமி நாடார் என்கிற ஆசிரியர் உயர்நிலைப் பள்ளி படிக்கும்போது தலைமையாசிரியராக வந்தார். அவர்தான் என்னில் ஆங்கில அறிவை வளர்த்தவர். எங்களை சிறு சிறு குழுக்களாகப் பிரித்து விடுவார். தெனாலிராமன், பஞ்சதந்திரம் போன்ற தமிழ் சிறு கதைகளை தமிழ் குழுவில் வாசிக்க வைப்பார். பிறகு அதை நாங்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து கதையாகக் கூற வேண்டும். சிறு சிறு இலக்கணத் தவறுகளை திருத்தித் தருவார். அவ்வாறே மொழிபெயர்க்கும் திறனும், பேசும் திறனும் வளர்ந்தது. 7ஆம் வகுப்பு படிக்கும்போது வெள்ளகண்ணு என்கின்ற ஆசிரியர் Parts of Speech சொல்லிக் கொடுத்து வாக்கியங்கள் அமைக்கக் கற்றுக் கொடுத்தார். 7ஆம் வகுப்பிலேயே நாங்கள் ஆங்கிலத்தில் வாக்கியங்கள் அமைக்கக் கற்றுக் கொண்டோம்.

**ஆசிரியர்கள் அடித்தாலும் கோபம் வராது, பாசம்தான் அதிகரிக்கும்.**

**நடுப்பட்டியில் படித்துக் கொண்டிருந்த நீங்கள், ஏன் திருச்சி மாநகரில் உள்ள பள்ளிக்குச் சென்றீர்கள்?**

■ கிராமப் பள்ளிக்கூடங்களில் சிறப்பாக படிக்கும் மாணவர்களுக்கு நகர்புறக் கல்வி கொடுக்க வேண்டும் என்கின்ற நோக்கில், 8-ம் வகுப்பு மாணவர்களுக்கு Talent Test நடத்துவார்கள். ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு இரு மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். நான் அத்தேர்வில் தேர்ச்சி பெற்று, 10 மற்றும் 11-ஆம் வகுப்புகளை திருச்சியில் உள்ள Bishop Heber பள்ளியில் படித்தேன். அப்பள்ளியின் தலைமையாசிரியர் என்னிடம் ஆங்கிலத்தில் சில கேள்விகள் கேட்டார். நான் பதிலளித்த விதத்தைப் பாராட்டியதுடன், ஆங்கில வழியில் கல்வி கற்க கூறினார். நான் தமிழின் மீது இருந்த பற்றால் அதை மறுத்துவிட்டேன். அங்கும் ஆசிரியர்களின் அங்கீகாரம் கிடைத்தது. 11ஆம் வகுப்பு முடித்துவிட்டு நான் காந்தி கிராமம் பல்கலைக் கழகத்தில் PUC படித்தேன்.


**அன்றைய ஆசிரியர்களுக்கும் இன்றுள்ள ஆசிரியர்களும் இடையேயான வித்தியாசம்?**

■ அன்று ஆசிரியர்கள் மாணவர்களுடன் வெகுநேரம் உரையாடுவார்கள், பேசுவார்கள், அறிவுரை கூறுவார்கள், தட்டிக் கொடுப்பார்கள். என்ன படிக்க வேண்டும் என்பதை எல்லாம் விவாதிப்பார்கள். ஒவ்வொரு மாணவனையும் தன்னுடைய பிள்ளையாகவே பார்த்தார்கள். சுதந்திரமாக ஆசிரியர்களிடம் பேச முடியும்.

அதே நேரத்தில் எங்களின் ஒழுக்க நெறி வாழ்வின் மீது அதிக கவனம் செலுத்தினார்கள். ஆசிரியர்கள் அடித்தாலும் கோபம் வராது, பாசம்தான் அதிகரிக்கும்.

**தொழிற்கல்வியை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்?**

■ நான் ஒரு சிறந்த மாணவன். ஆகவே B.Sc., Maths எடுத்துப் படிக்க ஆரம்பித்தேன். ஆனால் குடும்ப சூழல் என்னை வித்தியாசமாக சிந்திக்கத் தூண்டியது. படித்து முடித்தவுடன் வேலை கிடைக்க வேண்டும். அப்படியென்றால் அதற்கு ஒரே வழி தொழிற் கல்வி படிப்பதுதான் என்று முடிவெடுத்து, விருத்தாசலத்தில் உள்ள Institute of Ceramic Technology-ல் சேர்ந்து தொழில் நுட்ப படிப்பை மேற் கொண்டேன்.



உலகலளவில் புகழ்பெற்ற கல்வி நிறுவனம் அது. கற்றுக்கொடுக்கும் விதமே வித்தியாசமானது. படிக்கும்போதே Industry-ல் வேலை. Industry-யோடு இணைந்தே படிப்பும் இருந்தது. நிறைய அனுபவங்கள் கிடைத்தது. தொழில் நுட்பங்களை முழுவதும் கற்றுக் கொள்ள முடிந்தது. நான்கு வருட டிப்ளமோ படிப்பு அது.

**உங்களது முதல் வேலை பற்றி...?**

■ அதுவும் சுவாரசியமான சம்பவம். நான் படித்து முடிக்கும் முன்பே எனக்கு வேலை கிடைத்தது. அப்போது Campus Interview கிடையாது. மூன்றாம் ஆண்டு இறுதியில் தொழில் முதலீட்டாளர்கள் சிலர் இந்த Industry-ல் முதலீடு செய்ய வேண்டும் என்கின்ற நோக்கத்தில் வந்தார்கள். எங்களுடைய முதல்வர் அவர்கள் ஒரு வாரம் அவர்களுடனே இருந்து அவர்களுக்கு அனைத்தையும் விளக்கச் சொன்னார். நானும் அவர்களுக்கு அத்தனை இடத்தையும் சுற்றிக்காட்டி, தொழில் யுக்திகளை பகிர்ந்து கொண்டேன். ஒரு வாரத்திற்குப் பின்பு திரு. ஏ.சி. காமராஜ், மதுரையைச் சார்ந்தவர் – அந்தக் குழுவில் இருந்தவர். தம்பி நீ நாங்க ஆரம்பிக்கின்ற நிறுவனத்தில் சூப்பர்வைசராக வந்து சேர்ந்துவிடு என்று சொல்லிவிட்டு, சென்று விட்டார்கள். என்னுடைய முதல்வரும் சம்மதம் தெரிவிக்க நான் கல்லூரியில் விடுமுறை எடுத்துவிட்டு வேலையில் சேர்ந்தேன். 4-ம் வருட Internship-ம் அங்கேயே செய்தேன். ஒன்றரை வருடம் அந்தக் கம்பெனியில் வேலைப் பார்த்தேன். முதலீட்டாளர்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனையால் வேறு ஒரு பணியிடம் செல்ல வேண்டியதாகியது.

**திரு. ஏ.சி. காமராஜ் அவர்கள் உங்களை ஏன் தெரிந்தெடுத்தார்கள்?**

■ ஒன்று என்னுடைய '**அணுகுமுறை**'. இரண்டாவது என்னிடம் இருந்த 'DATA'. உதாரணமாக, யார் யாரையெல்லாம் தொடர்பு கொண்டால் Madurai Ceramics கம்பெனியை ஆரம்பிக்க முடியும். நான் அவர்களுக்கு ஒரு தகவல் களஞ்சியமாகவும், தொடர்புகள் ஏற்படுத்துவதில் வல்லுநராகவும் தெரிந்தேன்.

**எங்கெல்லாம் நீங்கள் வேலை செய்தீர்கள்?**

■ சென்னையில் சிலகாலம், அதன்பிறகு வடமாநிலத்தில் – நாக்பூர். அங்கிருந்து சிம்லா (சிம்லா – சண்டிகருக்கும் இடையில்).

என்னுடைய சொந்த முயற்சியில் Soft Ferrite Technology -ஐ கற்றுக் கொண்டேன். அது சம்பந்தமாக இரண்டு மாதம் 1986-இல் கிழக்கு ஜெர்மனியில் இந்த தொழில் நுட்பத்தை இன்னும் ஆழமாகக் கற்றுக் கொண்டேன்.

**ஜெர்மனியைப் பற்றி கூறுங்களேன்...?**

■ அது ஒரு வித்தியாசமான நாடு. கட்டுப்பாடுகள் அதிகம். ஒழுங்கு நெறிமுறைகளை எங்கும் காண முடியும். அங்கு கற்றுக் கொண்ட சில விஷயங்களைத்தான் இன்றும் நான் என்னுடைய வாழ்வில் கடைபிடிக்கின்றேன். உதாரணமாக – சீட் பெல்ட் போடாமல் கார் ஓட்டமாட்டேன். கார் ஓட்டும்போது போன் பேச மாட்டேன். மற்றவர்கள் தவறு செய்தாலும் கோபப்பட மாட்டேன். இத்தகைய ஒழுக்க நெறிகளை கற்றுக் கொண்டது ஜெர்மனியில்தான்.

**இந்தியாவில் மட்டும்தான் வேலை பார்த்தீர்களா? அல்லது வெளிநாட்டிலும் வேலை பார்த்தீர்களா?**

■ ஜெர்மனியில் கற்றுக்கொண்டு வந்தபிறகு R&D (Research and Development)-யில் அதிகம் ஈடுபட்டேன். அதனால் பல ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்ற வாய்ப்பு கிடைத்தது. பாம்பேயில் International Conference on Ferrite நடைபெற்றது. நானும் பங்கேற்றேன். மிகப்பெரிய தொழில்நுட்ப வல்லுநர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. தைவானில் வேலை வாய்ப்பு கிடைத்தது. ஆனால் அப்போது Kuwait - invasion நடந்த நேரம். எனது கனவு தகர்ந்தது. 1990-இல் கிராமத்திற்கு திரும்பி வந்தேன்.

அந்த நேரத்தில் மேற்கு வங்காளத்திலுள்ள ஒரு கம்பெனியுடன் தொடர்பு உருவாகியது. அங்கு 91 முதல் 94 வரை Technology Consultant-ஆக வேலை கிடைத்தது. அந்த நேரத்தில் ஜோதிபாசு போன்றவர்களுடன் உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. கையில் நிறைய காசு இருந்தது. விவசாயிகளிடம் தேவையான தொழில்நுட்பம் போய் சேரவில்லை என நினைத்தேன். ஆகவே 94-99 வரை கிராமத்தில் வந்து விவசாயம்

பார்க்க ஆரம்பித்தேன். எனக்கு இருந்த தொழில்நுட்ப அறிவை பயன்படுத்தி விவசாயத்தில் மாற்றங்களைப் புகுத்தினேன். விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்காதவரை விவசாயி வெற்றி பெற முடியாது என்கின்ற எண்ணம் உருவாகியது.

அந்த நேரத்தில் மீண்டும் தைவானுடன் தொடர்புகள் உருவாகின. விவசாயம் பார்த்த ஐந்து வருடத்தில் Siemens - கம்பெனியின் Part-time Consultant-ஆக இருந்தேன். சிங்கப்பூர், ஜப்பான், ஜெர்மனி, தைவான் போன்ற நாடுகளுக்கு சென்று தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வந்தேன்.

என்னுடைய நண்பரின் ஆலோசனையின்படி 2000-ல் சைனா சென்றேன். 2012 வரை அங்கிருந்தேன். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இந்தியா வந்து செல்லும் வாய்ப்பு கிடைத்தது. நான் நினைத்துச் சென்ற சைனாவும், நான் கண்டு அனுபவித்த சைனாவும் வித்தியாசமாக இருந்தது. 12 வருட காலத்தில் மூன்று கம்பெனிகளுக்கு மாறியிருக்கிறேன்.

என் முதல் கம்பெனி முதல் கடைசி கம்பெனி வரை இப்போதும் தொடர்பிலேயே இருக்கின்றேன். அந்தளவிற்கு என்னுடைய ஈடுபாடு இருந்தது. தொழில் தர்மம் இருந்தது. ஆகவே எல்லா கம்பெனியிலும் எனக்கு மதிப்பு இன்றும் உள்ளது. இப்போதும் நான் வேலைக்குப் போய் சேரலாம்.

கடைசி வருடங்களில் 1 மாதம் சைனா 1 மாதம் இந்தியா. அக்காலக் கட்டத்தில் கிராமப் பணிகளில் அதிகமாக ஈடுபட ஆரம்பித்தேன்.

**சைனாவில்... மறக்கமுடியாத அனுபவங்கள்...**

■ நான் வேலை பார்த்த இடத்தில் ஒரு மழலையர் பள்ளி இருந்தது. அங்கு ஆங்கிலம் கற்றுக் கொடுக்க ஆசிரியர்கள் தேவைப்பட்டார்கள். என்னிடம் வந்து யாராவது கிடைப்பார்களா என்று கேட்டார்கள். நான் நானே வந்து சொல்லித் தருகின்றேன் என்றேன். எவ்வளவு சம்பளம் எதிர்பார்ப்பீர்கள் எனக் கேட்டார்கள். சம்பளம் தேவையில்லை, கடவுள் கிருபையில் மாதம் 2600 டாலர் சம்பாதிக்கிறேன் என்று கூறி, நானும் என்னுடைய மொழி பெயர்ப்பாளரும் சென்று ஆங்கிலம் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தோம். அந்த சைனா சமூகத்தில் எனக்கு கிடைத்த அங்கீகாரத்திற்கு அளவே இல்லை. பெற்றோர்கள், அதிகாரிகள், அரசாங்கமே பாராட்டியதுடன் சான்றிதழ்களும் கொடுத்தார்கள்.



அந்தப் பள்ளி நிர்வாகிக்கு மிகப்பெரிய பெருமை. ஒன்றிரண்டு மாதத்திலேயே நான் இன்ஜினியர் என்கின்ற நிலையிலிருந்து வாத்தியார் என்கின்ற நிலைக்கு சென்றுவிட்டேன். டி.வி.யில் கூட என்னை Interview எடுத்து ஒளிபரப்பினார்கள்.

மொழி தெரியாத ஊரில் இந்த பிள்ளைகளுக்கு நம்மால் இவ்வளவு செய்ய முடியுமென்றால், ஏன் நாம் இந்தியாவில்... நான் பிறந்த மண்ணில் செய்யக்கூடாது என்று தீர்மானித்தேன். அந்த எண்ணத்தின் அடிப்படையில் பிறந்ததுதான் **Farm India** என்கிற அமைப்பு.

**இன்றைய இளையோர்களிம் மண்டிக்கிடக்கும் திறன்கள்/திறமைகளாக எதைக் கருதுகின்றீர்கள்?**

■ இன்றைய இளையோர்களிடம் திறமைகளுக்கு எந்தவிதமான குறைபாடும் இல்லை. நம்முடைய காலத்தில் கவனச் சிதறலுக்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாக இருந்தது. ஆனால் இன்று ஊடகங்கள் மிகப்பெரிய பாதிப்பை / தாக்கத்தை இளையோர்களிம் ஏற்படுத்தியுள்ளது. பாஸிட்டிவான பாதிப்புகள் இருந்தாலும், நெகட்டிவான பாதிப்புகளே அதிகமாக உள்ளது. நடிகர்களை வணங்குதல் அதிகம் காணப்படுகிறது. அதனால் தான் கவனத்தைக் கூர்மைப்படுத்துதல் (Focus) இல்லாமல் போகின்றது.

**உங்கள் பின்னால் ஒரு இளையோர் பட்டாளமே இருப்பதற்கு என்ன காரணம்?**

■ எனக்குப் பின்னால் இருக்கின்றார்கள் என்பதைவிட கிராமத்திற்கு நம்மால் முடிந்ததைச் செய்ய வேண்டும் என்கின்ற ஒற்றை எண்ணத்தில் இணைந்து உள்ளார்கள். எங்களுடைய கல்விப் பணியின் வெற்றிக்குக் காரணம் இளையோர்கள்தான். அதே நேரத்தில் இளையோர்களை நெறிப்படுத்த வேண்டியதும் அவசியம்.

**இளைஞர்களை நெறிப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம்.**

நான் கிராமத்தில், கல்லூரிகளில் இளையோர்களை சந்திக்கும்போது 'தம்பி, இந்த வயது மிகவும் இக்கட்டான வயது. எது எல்லாம் சரியோ, அது எல்லாம் தப்பாகத் தெரியும். எது எல்லாம் தப்போ, அது எல்லாம் சரியாகத் தெரியும். அதனால உனக்குப் பிடிச்சிருக்குன்னு நினைத்தால் தயவு செய்து உடனே அதைச் செய்யாதே. உன்னுடைய நல்ல நண்பர், ஆசிரியர், உன் நலம் விரும்பி அல்லது வழிகாட்டி – இவர்களுடன் கலந்தாலோசித்து செயல்பாடுகளில் இறங்கு' எனக் கூறுவேன். இளைஞர்களை நெறிப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம்.

**இன்று உயர்கல்விக்கான வாய்ப்புகள் எவ்வாறு உள்ளது?**

■ இன்று வாய்ப்புகள் அதிகம். என்னுடைய காலத்தில் கல்லூரியில் படித்து விட்டாலே வேலைக் கிடைக்காது என்கின்ற எண்ணமே மேலோங்கி இருந்தது. ஆனால் இன்று கிடைக்கும் வேலை செய்ய வேண்டும் என்கின்ற மனப்பாங்கு உள்ளவர்களுக்கு வாய்ப்புகள் அதிகம். IT சார்ந்த வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றது. ஒரு மாணவன் / மாணவி கல்லூரியை விட்டு வெளியே வந்தவுடன் தன்னை நிலைப்படுத்திக் கொள்ள வேண்டும், தன் குடும்பத்தை நிலைப்படுத்திக் கொள்ள வேண்டும். அதன்பிறகு தான் சமூகம், இயற்கை, சுற்றுச்சூழல் என்பதெல்லாம். சமூகப் பார்வை கல்லூரி நாட்களிலேயே இளையோருக்கு இருக்க வேண்டும். முழுமையான சமூக ஈடுபாடு தன்னை நிலைநிறுத்திய பிறகு இருந்தால் சிறப்பு.

Core Industry-ல் வாய்ப்புகள் அதிகம். உதாரணமக – Automobiles, Textiles. விவசாயம் சார்ந்த படிப்புகளும் அதிகம் உளளது. அதில் வேலைவாய்ப்புகளும் மண்டிக் கிடக்குது.

**நீங்கள் கூறுவதுபோல் வாய்ப்புகள் கொட்டிக் கிடந்தாலும் +1, +2 மாணாக்கர்கள் தங்களது உயர்கல்வி குறித்து முடிவெடுக்க முடியாத நிலையிலேயே இருக்கின்றார்கள். அது பற்றி உங்கள் கருத்து...**

■ மாணாக்கர்கள் கீழ்காணும் அடிப்படையில் முடிவுகள் எடுப்பதாக நான் கருதுகின்றேன்.

1. தன்னுடைய நண்பர்கள் / தோழிகள் எந்த படிப்பு படிக்க வேண்டுமென்று முடிவெடுக்கின்றார்களோ, எந்தக் கல்லூரிக்கு போக வேண்டும் எனத் தீர்மானிக்கின்றார்களோ, அதன் அடிப்படையிலேயே பெரும்பாலான தீர்மானங்கள் எடுக்கப் படுகின்றது.

2. 10ஆம் வகுப்பு முடித்தவுடன் மதிப்பெண்ணுக்கு ஏற்ப ஒரு Group-ஐ பள்ளி அல்லது ஆசிரியர் திணிக்கின்றனர். அதனால் இவனே விரும்பினாலும் வித்தியாசமாக முடிவெடுக்க முடியாது.



இந்த உலகமே உன்னைத் திரும்பிப் பார்க்க வேண்டுமென்றால், நீ யாரையும் திரும்பிப் பார்க்காதே
- அடால்ஃப் ஹிட்லர் -

3. பள்ளிகளும் தீர்மானிக்கின்றன. எங்கள் பள்ளியில் Bio-Maths இல்ல, அதனால Accountancy எடுத்துக்க என பல நேரங்களில் பள்ளிக்கூடங்கள் நிர்பந்திக்கின்றன.

பொறியியல் துறைக்கு செல்லும் வலிமை பெற்றவன், 10ஆம் வகுப்பில் குறைந்த மதிப்பெண்கள் பெற்றதால் B.A. History படிக்க நிர்பந்திக்கப்படுகின்றான்.

4. அடுத்ததாகத்தான் பெற்றோர்கள். பொம்பள பிள்ளை, அவளை எப்படி தூரமாக அனுப்புவது, நம்முடைய கண் பார்வையிலேயே படிக்கட்டும். சரியான அங்கீகாரம் பெறாத நிறுவனமென்றாலும் கொண்டு போய் சேர்த்து விடுகின்றார்கள்.

6-ம் வகுப்பிலிருந்தே – தங்களது விருப்பப்பட்ட துறையைத் தேர்ந்தெடுக்க வழிநடத்தப்பட வேண்டும்.

**பெற்றோர்களை பிள்ளைகள் ஏன் எதிரிகளாகப் பார்க்கின்றார்கள்?**

■ இதற்கு வயதுதான் காரணம். மீடியாக்கள் பெரும்பாலும் பெற்றோர்களை வில்லன்களாக சித்தரிப்பதில்லை. இந்த வயதே எதையாவது ஒன்றை செய்யாதே என்றால் செய்யும் வயது.

பெற்றோர்களும் பிள்ளைகளுடன் செலவிடும் நேரம் மிகவும் குறைந்துவிட்டது. உறவுக்கான வாய்ப்புகளும் குறைந்து விட்டது.

பெற்றோர்கள் பிள்ளைகளுடன் நேரம் செலவழித்தால் தான் உறவுகள் பலப்படும்.

**இளையோர்களை எவ்வாறு நன்னெறிப்படுத்துவது?**

■ எனக்கு மிகவும் பிடித்த குறள் ஒன்றின் வரி 'நன்றல்லதை அன்றே மறப்பது நன்று'. இளையோர்கள் பலவற்றை கேட்கின்றார்கள், பார்க்கின்றார்கள். நல்லது அல்லாதவைகளை மறந்திடக் கற்றுக் கொள்ள வேண்டும்.

'நகுதல் பொருட்டன்று நட்டல்'

'நகுதல்' என்றால் காமெடி பண்ணுவது. சிரித்து பேசுவதற்காக மட்டும் நட்பில்லை.

'மிகுதிக்கண் மேற்சென்றி இடித்தல் பொருட்டு'.

நட்பு எதற்காக என்றால் நண்பன் தவறாக செல்லும்போது இடித்துரைத்தல் வேண்டும்.

நல்ல நட்பும், பாசமான பெற்றோர்களின் அரவணைப்பும், ஆசிரியர்களின் தீர்க்கமான வழிகாட்டுதல்களுமே இளையோரை நெறிப்படுத்த முடியும்.

**இளையோர்கள் மத்தியில் வாசிப்பு பழக்கம் - உங்கள் கருத்து...**

■ வாசிப்பு பழக்கம் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஒவ்வொரு விதமாக இருந்துள்ளது. தொழில்நுட்ப வேகத்திற்குள் இளையோர் சரியாக Fit ஆகவில்லையென நான் கருதுகிறேன். மிகப்பெரிய வாசிப்பாளர்கள் என்று பார்த்தால் அறிஞர் அண்ணா, டாக்டர் அம்பேத்கர், நேரு போன்றோரை குறிப்பிடலாம். அவர்கள் வாசிப்பினால் வளர்ந்தவர்கள்.

இப்போது வாசிப்பை நேசிப்போம் என்கின்ற ஒரு அமைப்பின் மூலம் நாங்கள் மாணாக்கர் மத்தியில் வாசிப்பு பழக்கத்தை உருவாக்கி வருகின்றோம்.

முதலில் தலைவர்களை பற்றிய புத்தகங்களை முதலில் வாசிக்கக் கொடுக்கலாம். வாசிப்பில் ஒரு ஈர்ப்பு உருவாக வேண்டும். குழு வாசிப்பை ஊக்குவிக்கலாம். தாங்கள் உள்வாங்கிய கருத்துக்களை பிறருடன் பகிர்ந்துக் கொள்ளத் தூண்ட வேண்டும்.

தலைவர்களின் வாழ்க்கை அவர்களுக்கு கண்டிப்பாக புத்துணர்வு கொடுக்கும்.

தினசரி பத்திரிக்கை வாசிக்கும் பழக்கத்தை பள்ளிகள் தான் ஊக்குவிக்க வேண்டும். வாசிக்காத காரணத்தினால் பொது அறிவு மிகவும் குறைவாக உள்ளது.

**1964-ம் வருடத்திலிருந்தே ஓடிக்கொண்டிருக்கின்றீர்கள் - உங்களது குடும்ப வாழ்க்கை பற்றி...**

■ சிம்லாவில் வேலைப்பார்க்கும்போது திருமணம். இரண்டு பெண் குழந்தைகள். மூத்தவளுக்கு திருமணமாகி ஒரு குழந்தை உள்ளது. இரண்டாவது மகள் MSW படித்துக் கொண்டு இருக்கின்றாள். குடும்பப் பொறுப்பு ஓரளவிற்கு முடிந்து விட்டது. சமூகப் பொறுப்புகள் அதிகமாகிக்கொண்டே போகின்றது.

**தனியொருவனாக இளையோர் மத்தியில் மாற்றங்களை உருவாக்க முடியும். நாம் இணைந்திருந்தால் இளையோர் சமூகம் சவால்களை சந்தித்து சமூக அக்கறையுடன் கூடிய சமூகமாக உருவெடுக்கும்.**

**போட்டிகள் நிறைந்த இன்றைய உலகில் சரியான வழிகாட்டுதலோடு இலக்கை நோக்கிய தெளிவான பயணத்தை மேற்கொண்டால் வானமும் வையமும் நம் வசமே! வாழ்த்துக்கள் இளைஞர்களே! வாருங்கள்... நமக்கான புதிய உலகத்தை உருவாக்குவோம்!**

திரு. தங்கபாண்டியன் அவர்களுடன் பேச: **+91 8667829905**
என்ற எண்ணுக்குத் தொடர்பு கொள்ளவும்

## உணவுப் பழக்கம் பழமொழி வடிவில்



1. சீரகம் இல்லா உணவு சிறக்காது
2. தன் காயம் காக்க வெங்காயம் போதும்
3. வாழை வாழ வைக்கும்
4. அவசர சோறு ஆபத்து
5. இரைப்பை புண்ணுக்கு எலுமிச்சை சாறு
6. ரத்தக் கொதிப்புக்கு அகத்திக் கீரை
7. இருமலை போக்கும் வெந்தயக் கீரை
8. உண்ணா நோன்பு ஆயுளைக் கூட்டும்
9. உஷ்ணம் தவிர்க்க கம்பங்களி
10. கல்லீரல் பலம் பெற கொய்யாப் பழம்
11. கொலஸ்ட்ரால் குறைக்க பன்னீர் திராட்சை
12. சித்தம் தெளிய வில்வம்
13. சிறுநீர் கடுப்புக்கு அண்ணாசி
14. சூட்டைத் தணிக்க கருணைக்கிழங்கு
15. ஜீரண சக்திக்கு சுண்டைக்காய்
16. தலைவலி நீங்க முள்ளங்கிச் சாறு
17. தேனுடன் இஞ்சி இரத்தத் தூய்மை
18. பூண்டில் இருக்கு பென்சிலின் சக்தி
19. மூல நோய் தீர வாழைப்பூ கூட்டு
20. வாந்திக்கு மருந்து மணத்தக்காளி
21. வாதநோய் தடுக்க அரைக்கீரை
22. வாய் துர்நாற்றம் தீர்க்க ஏலக்காய்
23. பருமன் குறைழி முட்டை கோஸ்
24. பித்தம் தணிக்க நெல்லிக்காய்
25. குடல்புண் நலம் பெற அகத்திக் கீரை





நாம் இப்போது இருக்கும் நிலைமைக்கு நாமே பொறுப்பாளிகள். நாம் எப்படி இருக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ, அப்படி நம்மை அமைத்துக்கொள்ளும் ஆற்றல் நம்மிடமே இருக்கிறது – விவேகானந்தர்



# உயர்கல்வி என்னும் பயணத்தில் . . .

வசந்தி
தலைமையாசிரியர்
புனித வியான்னி மேல்நிலைப் பள்ளி, பள்ளியாடி

**உனக்குள்ளே புதையலைத் தேடு....!** – ஸ்டீபன்.

கல்வி ஒருவனை மனிதனாக்கும். கல்வி சமுதாயத்தை மாற்றும் சக்தி வாய்ந்தது. கல்வி தன் அறியாமையை அகற்றி அறிவொளி ஊட்டுவது. அத்தகையக் கல்வியைத் தேடித் தேடி கற்க வேண்டும்.

**திரை கடலோடி திரவியம் தேடு** – என்பார்கள். நிறைந்த கல்வியறிவைப் பெற புத்தகங்களை தேடித் தேடி வாசித்த பெரியோர்கள் உண்டு. கல்வியைப் பெற தன் ஆர்வத்திற்கு ஏற்ப நல்ல பள்ளி / கல்லூரிகளைத் தேடிச் செல்பவர்கள் உண்டு. ஏன் நாடுகளைத் தேடிச் சென்றவர்களும் உண்டு.

ஆனால்... இன்று நிலைமை வேறு. படிப்பு என்றாலே கசப்பு. விரட்டி விரட்டி படிக்க வைக்க வேண்டிய நிலைமை. வெறுமனே வெற்றி மதிப்பெண் பெற்றாலே போதும் என்ற நிலைமை. ஆசிரியர் வராமல் இருந்தால் ஒரே அரட்டை, Jolly, Bell அடித்தால் வீட்டிற்கு ஓட வேண்டும். தொலைக்காட்சிப் பெட்டி முன் அமர வேண்டும் அல்லது அலைபேசியில் விளையாட வேண்டும் என்று படிப்பில் ஆர்வமில்லாமல்... சும்மா இருக்க வேண்டும். கஷ்டப்படக் கூடாது, வியர்வை சிந்தக் கூடாது, ஆனால் நல்ல வேலைக் கிடைக்க வேண்டும். நல்ல சம்பளம் வாங்க வேண்டும். வாழ்க்கை ஓகோ என அமைய வேண்டும் என்ற கனவுக்கு மட்டும் குறைச்சல் இல்லை.

தற்போது நிலைமை இன்னும் தலைகீழாகப் போய் விட்டது. NEET தேர்வும் வந்தது. மாணவ / மாணவியரிடம் இருந்த கொஞ்ச நஞ்ச ஆர்வமும் போய்விட்டது. பள்ளிப் படிப்பு எதற்கு? நல்ல மதிப்பெண் எதற்கு? எனக் கேட்கத் தொடங்கிவிட்டார்கள். ஆங்காங்கே NEET CRASH COURSE-CENTRES முளைத்துவிட்டது. பள்ளிக் கல்வி எல்லாம் சும்மா, போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்று, ஏதாவது மேற்படிப்புக்குச் சென்றாலே போதும் எனற் நிலையாகிவிட்டது.

## மூன்று விதமான மாணவர்கள்

### 1. பகல் கனவு

**பலர் எதிகாலத்தையும், கடந்த காலத்தையும் நினைத்துக் கொண்டு நிகழ்காலத்தை இழந்து விடுகின்றனர்** – மாவீரன் நெப்போலியன்

நான் இன்றைய பள்ளி மாணவ / மாணவியரை அவ்வாறு தான் பார்க்கிறேன். உயர்கல்வி என்ன படிக்க நினைக்கின்றார்கள் என்றால் தெரியாது. என் பெற்றோரைத் தான் கேட்க வேண்டும் என்பார்கள். பெற்றோரைக் கேட்டால் பள்ளியில் நீங்கள்தான் சொல்ல வேண்டும் அல்லது மதிப்பெண்கள் பார்த்து முடிவு செய்யலாம் என்பார்கள். இப்படிப் பள்ளிப் பருவத்திலே... தன் இலட்சியக் கனவைத் தெளிவாக்காமல் தொடர்வதால்... உயர்கல்வி செல்லும் போதும் தெளிவில்லாமல் முடிவெடுக்க முடியாமலும் திணறும் மாணவக் கூட்டம் ஒருபுறம்.

### 2. இலட்சியப் பாதை

தனக்கென ஒரு தனிப்பாதை அமைத்து... திட்டமிட்டுப் பள்ளிப் பருவத்திலே நன்றாக திட்டமிட்டதை செயல்படுத்த வேண்டும். பள்ளியில் முதன்மையாக வரவேண்டும், நல் உயர் கல்வியை நல்ல கல்லூரியிலேத் தொடர வேண்டும் என தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ளும் சிறிய மாணவக் கூட்டம் ஒரு புறம்.

### 3. ஈடுபாடின்மை

மாணவ / மாணவியர்களால் எதிலும் கவனம் செலுத்த முடியவில்லை. புரிந்து படிக்க முடியவில்லை. படிப்பைச் சுமையாக நினைப்பது, படிப்போடு போராடுவது, எது படித்தாலும் மறந்து போவது என்ற நிலைமை இன்னொரு புறம்.



## உயர்கல்வியைப் பெற சில வழிகாட்டல்கள்

**பொன்மொழி**



**எது வேண்டும் என்பதை தெளிவாகத் தேர்வு செய்து, அதையே இடைவிடாது சிந்தனை செய்யுங்கள். நீங்கள் விரும்பியது அனைத்தும் கிடைக்கும்.**

**– வில்லியம் ஜேம்ஸ்**

### 1. குறிக்கோள் - விருப்பம்

- நீ யாராக வேண்டும் என விரும்புகிறாய்? உன் வாழ்வின் குறிக்கோள் என்ன?
- சரியான உயர்கல்வியைத் தேர்ந்தெடுப்பது திருமணத்திற்குத் துணையைத் தேர்ந்தெடுப்பது போன்றதாகும்.

எனவே, மாணவ/மாணவியரே! உங்கள் விருப்பத்திற்கேற்றத் துறையைத் தேர்ந்தெடுங்கள். உங்கள் குறிக்கோளே உங்கள் விருப்பமாகட்டும்.

### 2. உடல் மற்றும் மனத் தகுதி

நீங்கள் தேர்ந்தெடுக்கும் துறைக்குத் தேவையான உடல் மற்றும் மனத்தகுதி இருக்கிறதா? என உளவியில் ரீதியான சுய தேர்வுகளைச் செய்தும் பார்க்கலாம். உதாராணம் - செவிலியராக / மருத்துவராக விரும்பினால், ஊசி குத்த / இரத்தத்தைப் பார்த்து ஒதுங்குதல் ஆகாது.

### 3. பெற்றோரின் பொருளாதார நிலைமை

தெரியாமல் ஒரு துறையில் சேர்ந்துவிட்டு, பின் தன்னால் உயர்ந்த கட்டணம் செலுத்த முடியாமல் படிப்பை இடையில் விடுவது என்பது எதிர்காலத்தைப் பாலைவனமாக்கி விடும். எனவே பெற்றோரிடம் கலந்து ஆலோசித்து, பிறக சேருவது நல்லது.




### 4. சரியான கல்லூரி அல்லது பல்கலைக் கழகத்தை தேர்ந்தெடுத்தல்

முழு அங்கீகாரம் பெற்றுள்ள கல்லூரிதானா? என கேட்டு அறிந்து கொள். அதுமட்டுமல்ல, அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் அங்கீகாரமும் பெற்ற கல்லூரியாக அமைதல் வேண்டும்.

## உன்னைத் தயாரிக்க மூன்று டிப்ஸ்

- தினசரி செய்தித்தாள் படி
- வேலைவாய்ப்பு செய்தியை வாரந்தோறும் தவறாமல் பார்
- பொது அறிவைத் திட்டமிட்டு வளர்த்துக் கொள்.

**நீங்கள் சரியானப் பாதையைத் தேர்ந்தெடுத்து இருக்கலாம். ஆனால் அதில் நீங்கள் ஓடிக் கொண்டே இருக்க வேண்டும். உட்கார்ந்து விட்டால் நசுக்கப்படுவீர்கள்**

- வில் ரோஜார்ஸ் -



போட்டிகள் நிறைந்த உலகமிது. போராடத் தயாரா? அப்படியெல்லாம் உன் புத்தியைத் தீட்டு. யாராக வேண்டும் என இலட்சியக் கனவு காண். திட்டமிடு, திட்டத்தைச் செயல்படுத்து... இதோ உன் எதிர்காலம் உன் கண்முன்னே!!!

***All the best!***

**நன்கொடைகள், விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன**


| | |
|---|---|
| முன் அட்டை உள்பக்கம் (மல்டி கலர்) | ரூ. 5,000/- |
| பின் அட்டை வெளிப்பக்கம் (மல்டி கலர்) | ரூ. 10,000/- |
| பின் அட்டை உள்ப்பக்கம் (மல்டி கலர் | ரூ. 5,000/- |
| உள் முழு பக்கம் (ஒரு கலர்) | ரூ. 2,000/- |
| உள் அரை பக்கம் (ஒரு கலர் | ரூ. 1,000/- |



நாம் இப்போது இருக்கும் நிலைமைக்கு நாமே பொறுப்பாளிகள். நாம் எப்படி இருக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ, அப்படி நம்மை அமைத்துக்கொள்ளும் ஆற்றல் நம்மிடமே இருக்கிறது – விவேகானந்தர்

# அமெரிக்க அதிபர்

# ஜார்ஜ் வாஷிங்டன்




இங்கிலாந்து வெள்ளைக்கார அப்பா தன் குழந்தையிடம் நிறைய சாகசக் கதைகள் சொல்லுவார். அந்தக் குழந்தையும் சலிக்காமல் கேட்கும். அப்படியே சொல்லிக்கிட்டு இருக்கும்போது, 'உலகம் என்றால் என்ன அப்பா?' என்று கேட்டாள். அந்த அப்பாவோ உலகம் அப்படி இருக்கும், இப்படி இருக்கும் என்று சொன்னார். அது அந்தக் குழந்தைக்குப் புரியவில்லை.

'இந்தியா என்கிற நாடு ஒன்று இருக்கிறது. அங்கு இருக்கிற மக்கள் எல்லாரும் எல்லா வசதி வாய்ப்புகளோடும் இருக்காங்க' என்று சொன்னார்.

'வசதி வாய்ப்புகள் என்றால் என்னப்பா?

'வசதி வாய்ப்புகள் என்றால் பஞ்சு மெத்தையும், பாலும் தேனும் கலந்த சோறும், பட்டுத் துணிகளும், தங்கம், வைரம், வைடூரியமும், மாணிக்கமும், ரத்தினமும், முத்துக்களும் எல்லாம் அங்கே சாதாரணமாம்'.

'அப்படியா அப்பா!

'இந்த இந்தியா எங்க இருக்குப்பா?'

'அதுவா, அது கடல் தாண்டி எங்கோ இருக்கிறது. அதை யாரும் பார்த்தது கிடையாது, கேள்விப்பட்டதோடு சரி'.

இவர்போல்தான் எல்லாத் தந்தைகளும் தன் பிள்ளைகளுக்கு சொல்லிக்கொண்டிருப்பார்கள்.

இப்படிக் கேள்வி கேட்ட குழந்தை கொலம்பஸ் பிறகு இந்தியாவை கண்டுபிடிக்கிறேன் என்று கிளம்பிப் போகும்போது புயல் வீசியதில் கப்பல் ஒரு கரையை ஒதுங்கியது. அவர் கேள்விப் பட்டதைப் போல் அங்கே இருந்த நிலப்பரப்புகள், அமைப்புகள் மிகவும் அழகாகவும் செழுமையாகவும் இருந்தன.

அவரோ மிக்க மகிழ்ச்சியில் திளைத்து, ஆகா, நான் இந்தியாவைக் கண்டுபிடித்து விட்டேன் என்ற ஆனந்த களியாட்டம் போட்டார். அங்கிருந்த மக்கள் எல்லாரும் சிவப்பு நிறமாக இருந்ததினால் அவர்களை செவ்விந்தியர்கள் என்று அழைத்தார்.

பின்னாளிலே தெரிய வந்தது அவர் கண்டுபிடித்தது இந்தியாவை அல்ல, அமெரிக்காவை என்று.

இப்படியே பிரெஞ்சுக்காரரும் அமெரிக்காவை கண்டு பிடித்திருந்தனர். அதனால் பிரெஞ்சுக்காரர்களும் அமெரிக்கா தன்னுடையதே என்று சொந்தங் கொண்டாடினர். போர்ச்சுகீசியர்களும் அமெரிக்காவை சொந்தங் கொண்டாடினர்.

அமெரிக்காவின் பூர்வீக குடி மக்களான செவ்விந்தியர்கள் அவர்களின் நாட்டில் என்ன நடக்கிறது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தனர்.

இங்கிலாந்தும், பிரெஞ்சுக்காரர்களும் மற்றும் போர்ச்சுகீசியர்களும் தங்களது நாட்டில் இருந்து வந்து குடியேற்றத்தை ஆரம்பித்தார்கள்.

இதிலிருந்துதான் பிரச்சனையே ஆரம்பிக்கிறது. ஒவ்வொருவரும் அமெரிக்காவை பங்குபோட நினைத்து போராட்டத்தை ஆரம்பித்தார்கள். அல்லது மற்ற நாட்டவரை தாக்க இங்கிலாந்தியர்களின் குடியேற்ற நிலப்பரப்பை ஆக்கிரமித்து கொண்டே சென்றனர் பிரெஞ்சுக்காரர்களும், போர்ச்சு கீசியர்களும். இவர்களுக்கிடையில் சண்டை முற்றிக் கொண்டே சென்றது. இதனால் அதைத் தடுத்து நிறுத்த ஆங்காங்கே பல ராணுவ துருப்புகளை ஏவிவிட்டது இங்கிலாந்து அரசு.

அதில் குறிப்பிட்ட படையை ஜார்ஜ் வாஷிங்டன் தலைமை பொறுப்பை ஏற்று வழிநடத்தினார். நிறைய தோல்விகளும், ஒரு சில வெற்றிகளும் அவருக்குக் கிடைத்தது.

இப்படி இங்கிலாந்தில் இருந்து ஆணை வரும் வரும். அதை அமெரிக்காவில் குடிபெயர்ந்த இங்கிலாந்தியர்கள் செய்ய வேண்டும். குடியேற்றம் பெற்ற இங்கிலாந்தியர்களுக்கென்று தனி சுதந்தரமும் உரிமையும் கிடையாது. எது வேண்டுமானாலும் இங்கிலாந்து அரசிடம் கேட்டுத்தான் பெற வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர். இவர்களுக்கு வேண்டிய சீர்திருத்தங்களை பரிசீலித்து இங்கிலாந்திற்கு அனுப்பினாலும், இங்கிலாந்து நாடாளு மன்றத்தால் நிராகரிக்கப்பட்டே வந்தன. ஆனாலும் இங்கிலாந்து நாடாளுமன்றம் எந்த சட்ட திட்டத்தை இயற்றுகிறதோ அந்தச் சட்டத் திட்டத்தை அவர்கள் ஏற்று மதித்து நடந்து வந்தார்கள். இருந்தாலும் இவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், உரிமைகள்கூட இங்கிலாந்து அரசாங்கம் மறுத்தும், நிராகரித்தும் வந்தது.

நாள்பட நாள்பட அவர்களின் நிலைமை மிகவும் மோசமாக சென்று கொண்டிருந்தது. பதிமூன்று மாகாணங்களிலிருந்தும் பிரதிநிதிகள் கூடி ஒரு முக்கியமான தீர்மானத்தை நிறை வேற்றினார்கள். இனிமேல் இங்கிலாந்து அரசாங்கம் இயற்றும் சட்டதிட்டத்தை மதிப்பதில்லை என்றும், தங்களுக்கென்று பலமான ராணுவத்தை அமைப்பதென்றும்.

தயாரானது அமெரிக்க ராணுவம். அதற்குத் தலைமை ஏற்று நடத்த ஜார்ஜ் வாஷிங்டனை நியமித்தார்கள். இங்கிலாந்தில் இருந்து படைகள் வந்திறங்கின. சங்கொலி முழங்க குடியேற்ற அமெரிக்கர்களுக்கும் இங்கிலாந்துக்கும் போர் ஆரம்பமானது.

கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகள் நடந்த அமெரிக்க போர், 1783ஆம் ஆண்டு வெர்செயில்ஸ் என்ற ஒப்பந்தத்தின் மூலம் ஒரு முடிவுக்கு வந்தது. இங்கிலாந்து அமெரிக்க சுதந்தரத்தை அங்கீகரித்தது. கனடாவுக்கும் அமெரிக்காவுக்குமான எல்லை வரையறுக்கப்பட்டது.

அமெரிக்க சுதந்தரப் போர் முடிவுக்கு வந்ததும் வாஷிங்டன் மிகத் தெளிவாக ஒரு விஷயத்தை சொல்லியிருந்தார். நமக்கு முன்னால் ஒரு பெரிய கடமை காத்திருக்கிறது. நமக்காக ஒரு நாடு கிடைத்துவிட்டது. போரில் அமெரிக்கக் கூட்டுப் படைகள் ஒற்றுமையாகப் பெற்ற வெற்றி, மாபெரும் வெற்றி என்பதில் சந்தேகமில்லை. அந்த நம்பிக்கை எல்லா மக்களுக்கும் இருக்கிறது. அதே நம்பிக்கையை மக்களிடமிருந்து பெறவேண்டும் என்றால் எல்லா மாகாணங்களும் ஒன்றுபட்டு ஒரே அரசாக, அதே சமயம் மக்கள் அரசாக மாறவேண்டும் என்றார்.

1789-இல் அமெரிக்க அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. அந்த சட்டத்தின்படி நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஜனாதிபதி தேர்தல் நடக்கும். அமைச்சர்களின் உதவியோடு ஜனாதிபதி ஆட்சி செய்வார்.

சட்டங்களை இரண்டு குழுக்கள் உருவாக்கும். ஒன்று குடியேற்ற நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட குழு. இந்தக் குழுவைத் தான் செனட் என்று அழைப்பார்கள். இன்னொரு குழு, மக்களால் ஓட்டுபோட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட குழு, நம்ம ஊர் சட்டமன்றம் மாதிரி. செனட் சபையில் இருப்பவர்களைத் தேர்ந்தெடுத்து செனட் சபைக்கு அனுப்பி வைப்பார்கள். இந்த இரண்டு சபைகளுக்கும் சட்டம் இயற்றும் அதிகாரமும், நிதி நிலைமையை கட்டுப்படுத்தும் அதிகாரம் இருந்தன.

இப்படி அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கி, நவீன அமெரிக்கா உருவாகக் காரணமாக இருந்தவர் ஜார்ஜ் வாஷிங்டன். புதிய அரசியலமைப்புச் சட்டங்களைக் கொண்ட அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியாக வாஷிங்டன்தான் பொறுப்பேற்க வேண்டும் என்று எல்லாரும் விரும்பினார்கள்.

வாஷிங்டன் தான் ஜனாதிபதியாக வேண்டும் என்ற குரல் நாடு முழுவதும் வலுத்துக்கொண்டே போனது. வாஷிங்டனுடன் போரில் பங்கெடுத்திருந்த கர்னல் லீ வாஷிங்டனுக்கு ஒரு கடிதம் எழுதினார். எந்த காரணத்தைச் சொல்லியும் நீங்கள் ஜனாதிபதியாகிற வாய்ப்பை மறுத்துவிடாதீர்கள். குறிப்பாக, உங்களுடைய தனிப்பட்ட பண்ணை வாழ்க்கைக்காக. நாடு உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறது.

1978, ஏப்ரல் 14 – அமெரிக்க காங்கிரஸ், வாஷிங்டன் தான் அமெரிக்காவின் ஜனாதிபதி என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. அதற்கான ஆணையை அவருக்கு அனுப்பியது. அந்த அழைப்பை வாஷிங்டன் ஏற்றுக்கொண்டார். ஏனென்றால், அது அமெரிக்க காங்கிரஸின் அழைப்பல்ல, அமெரிக்க மக்களின் அழைப்பு.

1789 ஏப்ரல் 30ஆம் தேதி அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார் ஜார்ஜ் வாஷிங்டன். பல துறைகளில் தன்னுடைய முழு பலத்தையும் கொடுத்து அமெரிக்காவை கட்டமைத்தார்.

○ நன்றி: **ஆசிரியர் பாலு சத்யா** ○

# நம் காலத்தின் மாமேதை




**1** மறைந்த மாபெரும் விஞ்ஞானி ஸ்டீவன் ஹாக்கிங் 1942 ஜனவரி 8 அன்று பிறந்தார். 2018 மார்ச் 14 அன்று மறைந்தார். ஆச்சரியப்படும் பல விஷயங்களை கண்டறிந்த அவருடைய பிறந்த நாள், இறந்த நாள் இரண்டுக்கும் வேறு இரண்டு முக்கிய விஞ்ஞானிகள் பிறந்தநாள். இறந்த நாளுக்கும் அபூர்வ ஒற்றுமை உண்டு. அவை என்ன?

**2** இங்கிலாந்தின் தலைநகரான லண்டனின் வடக்குப் பகுதியில் ஸ்டீவன் ஹாக்கிங் பிறந்தார். உலக அளவில் உயர்கல்விக்காகப் பெருமை பெற்ற ஆக்ஸ்போர்டுதான் அந்தப் பகுதி. ஹாக்கிங் பிறப்பதற்கு முன் அந்தப் பகுதியில் வீடு எடுத்துத் தங்குவதற்கு அவருடைய பெற்றோர் முடிவெடுத்ததற்கான காரணம் என்ன?

**3** ஹாக்கிங்கின் குழந்தைப் பருவத்தில் அவருடைய குடும்பத்தினர் சிக்கனமாக வாழ வேண்டிய நெருக்கடி ஏற்பட்டதால், டாக்ஸி ஒன்றின் மறுவடிவம் செய்யப்பட்ட சிறு குடியிருப்பில் சில காலம் வாழ்ந்திருக்கின்றனர். இதேபோல் பிற்காலத்தில் ஹாக்கிங்குக்கு ஏற்பட்ட நோயால் திருமணத்துக்குப் பிறகு வீடு தேடுவதில் ஏற்பட்ட நெருக்கடிக்கு முக்கியக் காரணம் என்ன?

**4** தொடக்கப் பள்ளியில் மற்ற குழந்தைகளைப்போல் வாசிக்கும் திறனை ஹாக்கிங்கால் வளர்த்துக் கொள்ள முடியாமல் இருந்தது. பிற்காலத்தில் தான் பிறந்த பகுதியில் இருந்த உலகப் புகழ்பெற்ற ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் இளங்கலைப் பட்டப்படிப்பு முடிந்தார். 1977-ல் அவர் முதலில் பேராசிரியர் பணிபுரிந்த பல்கலைக்கழகமும் உலகப் புகழ் பெற்றதுதான். அந்தப் பல்கலைக் கழகத்தின் பெயர் என்ன? எந்தத் துறையின் பேராசிரியராக பணி புரிந்தார்?

**5** கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் கணிதத்துக்கான லூகாசியன் இருக்கை என்ற மதிப்புமிக்க பேராசிரியர் பணியிடம் 1683–ல் உருவாக்கப்பட்டது. 1669–ல் இந்தப் பேராசிரியர் இருக்கையில் பணியமர்த்தப் பட்டவர் புகழ்பெற்ற விஞ்ஞானி ஐசக் நியூட்டன். ஹாக்கிங்குக்கும் லூகாசியன் இருக்கைக்குமான தொடர்பு என்ன?

**6** A Brief History of Time', 'Black Holes and Baby Universes and Other Essays', 'The Universe in a Nutshell', 'The Grand Design உள்ளிட்ட புத்தகங்கள் அவர் எழுதியதில் முக்கியமானவை. இதில் எ பிரீஃப் ஹிஸ்டரி ஆஃப் டைம் நூலை அடிப்படையாகக் கொண்டு 1992–ல் எரோல் மோரிஸ் ஆவணப்படம் ஒன்றை இயக்கினார். இந்தப் புத்தகம் எத்தனை வாரங்களுக்கு லண்டன் சண்டே டைம்ஸ் இதழின் அதிகம் விற்பனையான புத்தகங்கள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்திருந்தது? இந்தச் சாதனைக்காக 1998 கின்னஸ் சாதனைப் புத்தகத்திலும் இந்நூல் இடம் பெற்றது.

**7** ஸ்டீவன் ஹாக்கிங் புகழ்பெற்ற அறிவியல் புத்தகங்களை எழுதியிருந்தாலும், குழந்தைகளுக்கான புத்தகங்களையும் எழுதியுள்ளார். குழந்தைகளுக்கான பிரபஞ்சம் குறித்த சாகசபுத்தக வரிசையில் முதல் புத்தகம் பிரபஞ்சத்துக்கான ஜார்ஜின் ரகசியச் சாவி (George's Secret Key to the Universe). இந்த புத்தக வரிசையை யாருடன் இணைந்து அவர் எழுதினார்?

**8** புகழ்பெற்ற இசைக்கலைஞர் மொசார்ட் ஒரு மொத்த சிம்பனி இசைக்கோர்வையை தன் மூளைக்குள்ளேயே இசையமைத்து முடிவெடுத்து முடித்து விடுவதற்கு இணையாக ஹாக்கிங் சாதனைகளைச் சொல்லலாம் என்று இயற்பியலாளர் வெர்னர் இஸ்ரேல் ஒருமுறை பாராட்டியுள்ளார். இதேபோன்று, ஹாக்கிங்குடனான தனது வாழ்க்கை தொடர்பாக ஹாக்கிங்கின் முதல் மனைவி ஜேன் வைல்ட் இசைத் தொடர்புடைய ஒரு தலைப்பில் புகழ்பெற்ற புத்தகத்தை எழுதியிருக்கிறார். அதன் பெயர் என்ன?

**9** கல்லூரியில் படித்த காலத்தில் துடுப்புப் படகுக் குழுவில் படகோட்டி மேற்பார்வையாளராக ஹாக்கிங் செயல்பட்டு உள்ளார். பிற்காலத்தில் ஆமியோட்ராஃபிக் லேட்டரல் ஸ்கிலரோசிஸ் என்னும் நோயின் தாக்கத்தால் கொஞ்சம் கொஞ்சமாக பாதிக்கப்பட்டார். அந்த நோய்க்கு லூ கெரிக் நோய் என்பது இன்னொரு பெயர். இந்த நோயின் தாக்கத்துக்கு இடையே 1960–களில் ஊன்றுகோல்களைப் பயன்படுத்தியும் ஒரே இடத்தில் நீண்டநேரம் நின்று கொண்டும் அவர் பார்த்த வேலை எது?

**10** பிரபலத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பலவற்றில் கௌரவத் தோற்றத்தில் ஸ்டீவன் ஹாக்கிங் தோன்றியுள்ளார். தி சிம்ப்சன்ஸ், பிக் பேங் தியரி, ஸ்டார் டிரெக் போன்றவை அவற்றில் குறிப்பிடத்தக்கவை. புகழ்பெற்ற பிங்க் பிளாய்ட் இசைக் குழுவின் கீப் டாக்கிங் பாடலில் அவருடைய குரல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஹாக்கிங்கின் வாழ்க்கை தொடர்பாக எடுக்கப்பட்ட ஹாலிவுட் படம் The Theofy of Everything'. அதில் ஹாக்கிங்கின் கதாபாத்திரத்தை ஏற்று நடித்த நகர் எடி ரெட்மேய்ன் மூன்று முக்கிய விருதுகளைப் பெற்றார். அந்த விருதுகள் என்னென்ன?

விடைகள் ....ம் பக்கம்...



நல்லவனாய் இரு, அதை நிரூபிக்க முயற்சி செய்யாதே, அதைவிட முட்டாள்தனமான விஷயம் ஏதுமில்லை!

தலைவர்களை அறிவோம்

## கப்பலோட்டிய தமிழன்

# வ.உ. சிதம்பரம் பிள்ளை



வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள், பிரபலமாக வ.உ.சி. என்று அழைக்கப்பட்டார் அவர். 19ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் இந்தியாவின் மிக முக்கியமாமன வழக்கறிஞர்களுள் ஒருவரும் கூட. தனது சொந்த மாநிலமான தமிழ்நாட்டில் வலுவான தொழிற் சங்கங்கள் இயங்க தலைமை வகித்தாலும், ஆங்கிலேயர்களிடமிருந்த இந்திய சுதந்திரத்திற்காக போராடினார். தூத்துக்குடி மற்றும் கொழும்பு இடையே முதல் உள்நாட்டு கப்பல் சேவை அமைத்த மனிதர் என எல்லோராலும் நினைவு கூறப்படுகிறார். அவருக்கு, புரட்சி மனப்பான்மையும். ஆங்கிலேயருக்கு எதிராக தைரியமாக செயல்படும் திறனும் இருந்ததால், அவரது பாரிஸ்டர் பட்டம் பறிக்கப்பட்டது. அவரது துணிச்சலான தன்மையே அவருக்கு கப்பலோட்டிய தமிழன் என்று தமிழ்நாட்டில் பெயரெடுக்க வைத்தது. இதனையே ஆங்கிலத்தில், தமிழ் ஹெல்ம்ஸ்மேன் என்று கூறுகின்றனர். கப்பலோட்டிய தமிழன் என்று எல்லோராலும் அழைக்கப்படும் அவரின் வாழ்க்கை வரலாறு மற்றும் சுதந்தரத்திற்காக அவரது பங்களிப்பைப் பற்றி மேலுமறிய தொடர்ந்து படிக்கவும்.

| | | |
|---|---|---|
| பிறப்பு | : | செப்டம்பர் 5, 1872 |
| பிறந்த இடம் | : | ஒட்டப்பிடாரம், தமிழ்நாடு, இந்தியா |
| இறப்பு | : | நவம்பர் 18, 1936 |
| தொழில் | : | வக்கீல், அரசியல்வாதி |
| நாட்டுரிமை | : | இந்தியா |

**பிறப்பு:** வ.உ.சி. அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள தூத்துக்குடி மாவட்டத்தில் இருக்கும் ஒட்டப்பிடாரத்தில் செப்டம்பர் 5, 1872-ல் பிறந்தார்.

### குழந்தை பருவமும் சட்டத் துறையும்

அவரது தந்தை உலகநாதன் பிள்ளை நாட்டின் மிக முக்கியமான வழக்கறிஞர்களுள் ஒருவர். இதுவே, தனது கல்வி முடிந்த பிறகு, அவரைத் தனது தந்தையின் வழியில் தொடர்ந்து செல்ல ஊக்குவித்தது. அவர், தனது சொந்த ஊரான ஒட்டப்பிடாரத்திலும், அருகிலுள்ள திருநெல்வேலி பள்ளிகளிலும் சேர்ந்து கல்வி பயின்றார். தனது பள்ளிப்படிப்பு முடிந்த பிறகு, ஒட்டப்பிடாரத்திலுள்ள மாவட்ட நிர்வாக அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்தார். ஒரு சில ஆண்டுகளுக்கு பின்னர், அவர் சட்டப் பள்ளியில் சேர்ந்து, சட்ட ஆய்வுகளை நிறைவுசெய்து, அவரது தந்தை உலகநாதன் பிள்ளை போலவே ஒரு வழக்கறிஞரானார்.

சட்டத் தொழிலில் அவரின் மிகப்பெரிய உத்வேகமாக அவரது தந்தை இருந்தாலும், அவருக்கும் அவரது தந்தை உலகநாதன் பிள்ளை அவர்களுக்கும் செயல்படும் பாணிகளில் ஒரு அடிப்படை வேறுபாடு இருந்தது. அவரது தந்தை சமுதாயத்தில் பணக்காரர்களின் பிரச்சனைகளில் மட்டும் வாதாடுபவர். ஆனால் வ.உ.சி. அவர்கள், ஏழை மக்களின் மீது கொண்ட அனுதாபத்தின் காரணமாக, பல தருணங்களில் தனது செல்வாக்கு மிக்க தந்தையின் விருப்பத்திற்கு எதிராகவும் வாதாடியிருக்கிறார். தமிழ் நாட்டில் மூன்று துணை நீதிபதிகளின் ஊழல் குற்றச்சாட்டுகள் என்ற வழக்கில் சிறப்பாக வாதாடி குற்றங்களை நிரூபித்ததால். அவர் பலராலும் ஈர்க்கப்பட்டு, மிகச் சிறந்த வழக்கறிஞர் என்ற புகழ் பெற்றார்.

### அரசியல் வாழ்க்கை

செயல்மிகு அரசியலில் நுழையும் பொருட்டாக, 1905-ல் வ.உ.சி. அவர்கள் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினரானார். இந்தியாவில் சுதேசி இயக்கம் தலைதூக்கிய அந்த நேரத்தில், தலைவர்களான லாலா லஜ்பத் ராய், பாலகங்காதர திலகர் போன்ற பலரும் ஆங்கிலேய வர்த்தக பேரரசின் வற்புறுத்தலுக்கு முற்றுப்புள்ளி வைக்க முயற்சி செய்தனர். அதே காரணத்திற்காகவும், இந்திய பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் அவற்றைச் சார்ந்த சமூகப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலம் அரபிந்தோ கோஷ், சுப்ரமணிய சிவா மற்றும் சுப்ரமணிய பாரதி அவர்கள் சென்னை மகாணத்திலிரெந்து போராடினார்கள். இதுவே, வ.உ.சி.யை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் சேரவும், சென்னை மாகாணத்தின் உறுப்பினர்களுடன் இணைந்து போராடவும் தூண்டியது. பின்னர், அவர் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சேலம் மாவட்ட அமர்வில் தலைமைத் தாங்கினார்.

### கப்பல் நிறுவனம்

இந்திய தேசிய காங்கிரஸில் சேர்ந்த உடன். இந்தியா சுதந்திரம் பெறுவதற்காக அவர் முழு மனதுடன் சுதேசிப் பணியில் மூழ்கினார். அவரது சுதேசி வேலையின் ஒரு பகுதியாக, இலங்கையின் கடலோரங்களிலுள்ள ஆங்கிலேய கப்பல் போக்குவரத்தின் ஏகபோக உரிமைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என எண்ணினார். சுதந்திர போராட்ட வீரர் ராம கிருஷ்ணானந்தாவால் ஈர்க்கப்பட்ட அவர், நவம்பர் 12, 1906-ல் சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் நிறுவனத்தை நிறுவினார். தனது கப்பல் போக்குவரத்து நிறுவனத்தை தொடங்க, இரண்டு நீராவிக் கப்பல்களான எஸ்.எஸ். காலியோவையும், எஸ்.எஸ். லாவோவையும், மற்ற சுதேசி உறுப்பினர்களான அரபிந்தோ கோஷ் மற்றும் பால கங்காதார திலகர் உதவியுடன் வாங்கினார்.




First Indian passenger shipping service to Colombo by V.O.C.

ஆங்கிலே அரசாங்கம் மற்றும் ஆங்கிலேய வியாபாரிகளின் கோபத்தையும் தாண்டியும், வ.உ.சி.யின் கப்பல் தூத்துக்குடி-கொழும்பு இடையே வழக்கமான சேவைகளைத் தொடங்கியது. அவரது கப்பல் போக்குவரத்து நிறுவனம் ஒரு வர்த்தக மையமாக மட்டுமல்லாமல், பிரிட்டிஷ் இந்தியாவில் ஒரு இந்தியரால் அமைக்கப்பட்ட முதல் விரிவான கப்பல் போக்குவரத்து சேவையாகவும் இருந்தது. சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி, பிரிட்டிஷ் ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனிக்கு கடும் போட்டியாக இருந்தது. பிரிட்டிஷ் கப்பல் நிறுவனம் இந்தப் போட்டியை சமாளிக்க முடியாமல் கட்டணத்தை குறைக்க முடிவு செய்தது. இதற்கு பதிலளிக்கும் விதமாக வ.உ.சி.யும் தனது கப்பல் கட்டணத்தை மேலும் குறைத்தார்.

கடைசியில், பிரிட்டிஷ் ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி பயணிகளை இலவசமாக அழைத்துச் செல்வதாகக் கூறியது. மேலும், பயணிகளுக்கு இலவச சவாரி மற்றும் குடைகள் வழங்கும் உத்திகளைக் கையாண்டனர் ஆங்கிலேயர்கள். ஆனால், வ.உ.சி.யால் அவ்வாறு முடியவில்லை. இதனால் சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி திவாலாகும் விளிம்பிற்கே சென்றது.

## தேசிய மனப்பான்மை

அவர், நாட்டில் சுதேசி இயக்கத்தை விரிவாக்கவும், தவறான ஆங்கிலேய அரசாங்கத்தைப் பற்றி இந்திய மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் நோக்கத்துடனும் இருந்தார். இதன் நோக்கமாக அவர், திருநெல்வேலியிலுள்ள கோரல் மில்ஸ் தொழிலாளர்களின் ஆதரவைப் பெற்றார். ஆங்கிலேய அதிகாரிகள் ஏற்கனவே அவர் மீது கொண்ட வெறுப்பினால், இச்செயலை அரசாங்கத்திற்கு எதிரான துரோகம் என்று குற்றம் சாட்டி, மார்ச் 12, 1908 அன்று அவரைக் கைது செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டனர். அவரைக் கைது செய்த பின்னர், நாட்டில் வன்முறை வெடித்தது. இதனால், காவல் அதிகாரிகளுக்கும், பொது மக்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டு, நான்கு பேர் மரணம் அடைந்தனர். ஆங்கிலேய அதிகாரிகள், அவரது செயல்களுக்கு தீவிரமாக கண்டனம் தெரிவித்தாலும். நாட்டின் ஊடக ஆதரவு கிடைத்ததால், அவரின் தேசிய உணர்வை அவர்கள் நாளிதழ்கள் மூலமாக விரிவாகப் பாராட்டினார்கள். ஆங்கிலேயரர்கள், அவருக்கு எதிராக வழக்குத் தொடர முயற்சித்தாலும், நாட்டிலுள்ள இந்தியர்கள், சிறையிலிருந்து அவரை விடுவிக்க நிதி சேகரித்தனர். அச்சமயம், தென்ஆப்பிரிக்காவிலிருந்த மகாத்மா காந்தியும், வ.உ.சி.யின் பாதுகாப்பிற்காக மேலும் நிதி சேகரித்து இந்தியாவுக்கு அனுப்பினார். தனது கைதுக்குப் பின்னர், அவர் கோயம்புத்தூரிலுள்ள மத்திய சிறையில் ஜூலை 9, 1908 முதல் டிசம்பர் 1, 1910 வரை அடைக்கப்பட்டார். அவரின் புரட்சிகரமான மனப்பான்மையைப் பார்த்து அஞ்சிய ஆங்கிலேயர்கள், தெளிவாக அவருக்கு ஆயுள் தண்டனை விதித்தனர்.

V. O. Chidambaram Pillai



https://en.wikipedia.org/wiki/File:Grinding_mill_VOC2.JPG

சிறையில் இருந்த அந்நாட்களில், மற்ற அரசியல் கைதிகளுக்குக் கிடைத்த சலுகைகள் அவருக்குக் கிடைக்கவில்லை. இருந்தாலும் அவர் மற்ற குற்றவாளிகள் போல சிறையில் கடின உழைப்பில் ஈடுபட்டார், செக்கிழுத்தார். அவரது இந்த கடின உழைப்பு, அவரின் உடல்நிலையில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியது. இதன் விளைவாக அவரது உடல்நலம் படிப்படியாக சரிந்தது. இதனால் ஆங்கிலேய அதிகாரிகள் அவரை விடுதலை செய்யும் கட்டாயத்தில் தள்ளப்பட்டதால், டிசம்பர் 12, 1912 அன்று அவரை விடுதலை செய்தனர். சிறையில் இருக்கும்போது, அவர் தனது சட்ட மனுக்கள் மூலம் அவரது சுதேசி நடவடிக்கைகளைத் தொடர்ந்தார்.

சிறையில் கொடுமையான சூழ்நிலை நிலவியதால், அவர் விடுதலை செய்யப்பட்டார். அவரின் விடுதலைக்குப் பின், சிறைவாயிலின் முன்பு பெருமளவு தனது ஆதரவாளர்கள் கூட்டத்தை எதிர்பார்த்த அவருக்கு அச்சம் விளைவிக்கிற அளவுக்கு அமைதி காத்திருந்தது. இது அவருக்கு பெரும் வியப்பை ஏற்படுத்தியது. பாரிஸ்டர் பட்டம் அவரிடமிருந்து பறிக்கப்பட்டதால், அவரால் சட்டப்பயிற்சி மேற்கொள்ள முடியவில்லை. சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் நிறுவனமும் 1911-ல் ஒழிக்கப்பட்டதால், அவர் ஏழ்மை நிலையை அடைந்தார். அவர் தனது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் சென்னையில் குடியேறினார். பின்னர், சென்னையிலுள்ள பல்வேறு தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர்கள் நல அமைப்புகளின் தலைவரானார். 1920இல் அவர், இந்திய தேசிய காங்கிரஸின் கல்கத்தா அமர்வில் உறுப்பினரானார்.

## இலக்கியப் படைப்புகள்

அரசியல்வாதியாகவும், வழக்கறிஞராகவும் அவர் ஆற்றிய பணிகளைத் தவிர, அவர் ஒரு சிறந்த அறிஞரும் ஆவார். சிறையில் இருந்தபோது, தனது சுயசரிதையைத் தொடங்கிய அவர், 1921-ல் சிறையிலிருந்து விடுதலைப் பெற்றபின், அதனை நிறைவு செய்தார். அவர், ஒரு சில நாவல்களையும் எழுதியுள்ளார். அவர், தத்துவ எழுத்தாளரான ஜேம்ஸ் ஆலன் அவர்களின் பல படைப்புகளை தமிழில் மொழி பெயர்த்துள்ளார். தமிழில் மிக முக்கியமான படைப்புளாக திருக்குறள் மற்றும் தொல்காப்பியத்தின் தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார்.

## தனிப்பட்ட வாழ்க்கை

அவர், 1895இல் வள்ளியம்மையை மணந்தார். ஆனால், அவரது மனைவி 1901இல் இறந்தார். ஒரு சில ஆண்டுகளுக்குப் பின்னர், அவர் மீனாட்சி அம்மையாரை திருமணம் செய்தார். அவர்களுக்கு நான்கு மகன்களும், நான்கு மகள்களும் இருந்தனர். அவருடைய மூத்த மகன் தனது இளமைப் பருவத்திலேயே இறந்துவிட்டார். அவரது இரண்டாவது மகன் ஒரு அரசியல்வாதி. மூன்றாவது மகன் சென்னையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பணியாற்றினார். அவரது மகள்கள் அனைவரும் சென்னையில் வாழ்கின்றனர். அவரது வம்சாவளிகள் இன்றும் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் வசித்து வருகின்றனர்.

**இறப்பு:** ஆங்கிலேயர்களைக் கடுமையாக எதிர்த்ததால், அவரது வழக்கறிஞர் பட்டம் பறிக்கப்பட்டு. அவரை சிறையில் அடைத்தனர். சிறையிலிருந்து வெளிவந்த பின், அவர் ஏழ்மையான வாழ்க்கையே வாழ்ந்து வந்தார். தனது கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத நிலையிலே இருந்து வந்தார். அவர் தனது வாழ்வின் இறுதி வரை வறுமையில் வாழ்ந்து வந்தார். அவரது இறுதி மூச்சை, தூத்துக்குடியிலுள்ள இந்திய தேசிய காங்கிரஸ் அலுவலகத்தில் நவம்பர் 18, 1936 அன்று விட்டார்.


என்னிடம் சிறப்பான தனித்திறமை என்று எதுவுமே இல்லை... என்னிடம் இருப்பது ஆர்வம் மட்டுமே!
- எடிசன் -

## நினைவஞ்சலி

இந்திய சுதந்திர போராட்டத்தின் மிக முக்கியமான ஒருவராக நினைவு கூறப்பட்டவர் வள்ளிநாயகம் உலகநாதன் சிதம்பரம் பிள்ளை அவர்கள். அவர் தமிழ்நாட்டில் இன்று வரையிலும், பலரால் மிகவும் நேசிக்கவும், கொண்டாடப்படுபவரும்கூட.

- கப்பலோட்டிய தமிழன் என்றும், தமிழ் ஹெல்ம்ஸ்மேன் என்றும், கப்பல் செலுத்துகிற திசையைக் காட்டுபவர் என்றும் பல பட்டங்களைப் பெற்றார்.
- சுதந்திரத்திற்குப் பின்னர், அவரை நினைவுகூறும் வகையில். தூத்துக்குடி துறைமுகம் வ.உ.சி. போர்ட் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- அவரது பெயரில் தூத்துக்குடியில் ஒரு கல்லூரியும் உள்ளது.
- செப்டம்பர் 5, 1971 – அவரது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் இந்திய தபால் மற்றும் தந்தி தொடர்புத் துறை ஒரு சிறப்பு தபால்தலையை அவரின் பெயரில் வெளியிட்டது.
- கோயம்புத்தூரிலுள்ள வ.உ.சி. பூங்கா மற்றும் வ.உ.சி. மைதானம் மிக முக்கியமான பொது பூங்காவாகவும், சந்திப்புக் கூடமாகவும் இருக்கின்றது.
- விடுதலைப் போராட்டத்தில் அவரது புரட்சிகரமான செயலுக்காக கோயம்புத்தூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். சிறை வளாகத்தின் உள்ளே ஒரு நினைவுச் சின்னம் அவருக்காக அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
- திருநெல்வேலியையும் பாளையங்கோட்டையையும் இணைக்கும் பாலத்திற்கு வ.உ.சி. பாலம் என்று பெயரிடப் பட்டுள்ளது.
- கப்பலோட்டிய தமிழன் வள்ளிநாயகம் உலகநாதன் சிதம்பரம் பிள்ளை வாழ்க்கைக் கதையை அடிப்படையாகக் கொண்டு, 1961இல் கப்பலோட்டிய தமிழன் என்ற பெயரில் தமிழ் திரைப்படம் வெளியானது. அதன் முன்னணி பாத்திரமாக சிவாஜி கணேசன் அவர்கள் நடித்துள்ளார்.

## காலவரிசை

1872 : செப்டம்பர் 5ஆம் தேதி பிறந்தார்

1895 : வள்ளியம்மையை மணந்தார்

1901 : அவரது மனைவி நோயால் இறந்தார்

1905 : இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக அரசியலில் நுழைந்தார்.

1906 : நவம்பர் 12ஆம் தேதி தனது சொந்த கப்பல் நிறுவனமான சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியை துவங்கினார்.

1908 : மார்ச் 12ஆம் தேதி ஆட்சி எதிர்ப்பு கிளர்ச்சிக் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார்.

1908 : ஜூலை 9ஆம் தேதி கோயம்புத்தூர் மத்திய சிறைக்கு அனுப்பப்பட்டார்.

1911 : அவரது கப்பல் கம்பெனியான சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி கலைந்தது.

1912 : டிசம்பர் 12ஆம் தேதி சிறையிலிருந்து வெளிவந்தார்.

1920 : கல்கத்தாவில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் அமர்வில் ஆயத்தமானார்.

1936 : நவம்பர் 18ஆம் தேதி இறந்தார்.

நன்றி: **www.itstamil.com**

## கனவு இதழின் சொந்தக்காரர்கள் இவர்கள்

**DREAM Quarterly Magazine - PATRONS 2018**

| Sl. No. | Name | Place |
|---|---|---|
| 01 | Mr. Antony Balmin Jose G | Vattakarai, KK Dist |
| 02 | Mr. Arasan S. Ponnraj | Nagarcoil, KK Dist |
| 03 | Mr. Arun Prasath C | K K Nagar, Trichy |
| 04 | Ms. Benti Cruz A.S | Toronto, Canada |
| 05 | Mr. Britto J | Sagayanagar, KK Dist |
| 06 | Ms. Chandra | Nilakottai |
| 07 | Ms. G. Darlin Mary | |
| 08 | Mr. Durai Raj | M.P.K Secretary, ROSED, Musari |
| 09 | Ms. Esther Rani H | Tirukoilur |
| 10 | Ms. Helen P | Palliyadi, KK Dist |
| 11 | Ms. Helen Viji<br>Ms. G. Darlin Mary | Palliyadi, KK Dist |
| 12 | Ms. Hilda J | Mullaanganavilai, KK Dist |
| 13 | Ms. Jasmine Rani K | Maravankudieruppu, KK Dist |
| 14 | Ms. Jeeva S | Palliyadi, KK Dist |
| 15 | Mr. John Bennet P | Nagarcoil, KK Dist |
| 16 | Mr. Knox JR | Maravankudieruppu, KK Dist |
| 17 | Mr. Louis A Sahayam | Maravankudieruppu, KK Dist |
| 18 | Ms. Mary Mettilda T<br>Ms. Mary Selvi M<br>Ms. Sheeba Y | Palliyadi, KK Dist |
| 19 | Ms. Mary Maxima R | Palliyadi, KK Dist |
| 20 | Ms. Melina Rose | Glavuvilai, KK Dist |
| 21 | Mr. Murali K | Kumbakonam |
| 22 | Mr. Muthu Krishnan | Karaikkal |
| 23 | M/s. Nila Studio | Palliady, KK Dist |
| 24 | Mr. Oswald Quintal | Ponmalaipatti, Trichy |
| 25 | Dr. Paul. C.J | Kerala |
| 26 | Lr. Lawrence Peter Shaw A | Mel Ramanputhur, KK Dist |
| 27 | Mr. Prakash JK Kurusadi | Nagercoil, KK Dist |
| 28 | Mr. Rithish Raj V | Trichy |
| 29 | Fr. Robinson J | Kuzhithurai Diocese, KK Dist |
| 30 | Mr. Samuel Christdoss | Trichy |
| 31 | Ms. Sheeba T | |
| 32 | Ms. Shekina Evelin C | Cuddalore |
| 33 | Ms. Susannah Mary D | Maravankudieruppu, KK Dist |
| 34 | Mr. Thomaiyar G | K.K. Nagar, Trichy |
| 35 | Mr. Thomas Xavier J.R | Maravankudieruppu, KK Dist |
| 36 | Mr. Vidya Sagar. J | Thiruvannamalai |

கல்வி உதவித் தொகை வழங்கும் நிறுவனங்கள் நிறையவே உள்ளன. அனைவருக்கும் இது தெரிவதில்லை. அப்படியே தெரிந்தாலும் விண்ணப்பப் படிவங்களை நிரப்பிட உதவுவதற்கு யாருமில்லை. பல நேரங்களில் திறமையான ஏழை மாணவ மாணவியர்கள் பயன்பெற்றிட முடியாமல் போகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு அனைவரும் பயன்பெற்றிட உதவித்தொகை வழங்கும் நிறுவனங்களின் பட்டியலை தொகுத்து வழங்குகிறது – விஷன்ஸ் இந்தியா.

# Scholarship for Graduate Students



## 1. AMM Murugappa Chettiar Centenary Scholarship

The AMM Foundation has launched a special scholarship from the year 2013-2014. This Scholarship reaches out to poor, meritorious students pursuing professional courses in Government and Government aided colleges. This is a full fee scholarship and supports the students through the course.

The main objective of the scholarship is

- To extend financial support throughout the course for the selected scholars
- To provide them with opportunities to hone their skill and attitude require for a successful career and life.

